கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௬] கீலக வருஷம் ஆடிமீ [பகுதி-௯.

அறஞ்செயல்.*

—:o:—

பிறவித்துன்பமெனு வசையொடு புகல்கின்ற நிலையாகிய இவ்வுடற்பிறப்பினைச் சிறப்புறச்செய்து இம்மையில் இவ்வுடலே பயன்பெறப்புரியும் கருவியாய் அமையும்வண்ணம் அறம் பொருள் இன்பம் வீடெனு நான்கு முறைகளையும் வேதமே ஆன்மாக்களுக்குப்புகட்டி அம்முறை வழுவாதொழுகுவோர்க்கு அவ்வவர் மனத்திட்பத்துக்குத் தக்கவாறு பயனளிக்கப் பரமேசுவரன் என்றும் கண்விழியாநிற்கின்றானென்பது நங் காட்டினர் பாராட்டும் எல்லா நூல்களும் வற்புறுத்திக்கூறுங்கொள்கை. இந்நான்குவிதப் பெரும்பேறுகளில் எது மிக்க மாட்சிமையுடையது? ஊழ்வினைப்பான்மையால் வருந்துதலே தம்மியல்பாகப்பூண்டுழலும் ஆன்மாக்கட்கு ஒருபேறு கைபுகின் மற்றைய மூன்றுபேறுகளும் தம்மிற்றாமே ஒன்றின்பின் ஒன்றாய் இசைந்து கைகூட்டுவிக்கற்பால தெப்பேறு? இதற்கு மறுமொழி:—

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு" என வீட்டிற்கும் செல்வத்திற்கும காரணமாகவும்,

"அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில" என இன்பத்துக்கும் காரணமாகவும் அறமென்னும் ஒரே பேற்றினைப்பெரியோர் புகன்றிருக்கின்றனர். அவ்வா

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஏழாவது வருஷோத்சவ காலத்தில், இந்நகர் வக்கீல் ஸ்ரீமாந் - பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களால் எழுதிப்படிக்கப் பெற்றதாகும்—ப-ர்.

*

ருக அறமாவதென்னை? அறமென்னுமொழிதான் அமைந்த முறை யாது? "அறு" என்னும் வினையடியினின்று அறுத்தல் அதாவது பிரித்தல்--ஒன்றுடனொன்று கலவாது நிலைநிறுத்தல்--என்னும் பொருளை விவரிக்கும் பான்மையுடையதாய் அறமென்னும் மொழி எந்நூலினும்வழங்கப்பட்டுள்ளது. இம்மொழியமைந்த முறையும்வடநூலார் தருமமென்னும் மொழிக்குப் பொருள் கூறும் முறையும் ஒன்றுயிருப்பதை நாம் காணலாம். அஃதெவ்வாறெனில், "ஸோஷ ஸெதூஃ விய்ாரணஃ" என்று வேதமானது பரம்பொருளைக்குறித்தபொழுது "விய்ாரணஃ" என்னும் பதமானது பிரித்தலென்னும்பொருளையுடைய "விய்ரு" என்னும் வினையடியினின்று பிறக்க ஒன்றுடனொன்று கலவாது பிரித்து நிலைநிறுத்தும் கரையாகிய தர்மமே அப்பொருளென்று பொருள்படுத்தியிருக்கின்றனர். அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.

ஆதலால் தர்மமென்னும் வடமொழியும் அறமென்னுந் தமிழ்மொழியும் அமைந்திருக்கும் பான்மையை ஆராயின், ஓர் நெறியில்லாது இச்சைவழியொழுகியுழலும் விலங்கினத்திற்கு மானிடப்பிறப்பை மேலாகவமைத்து அம்மாந்தர்கள் இம்மைத்துயரத்தால் இழுக்குற்றுக்கேடுறுவண்ணம் அத்துயரத்தைக்குறைத்து அவர்கட்கு விலங்கினத்திற்கெட்டா மறுமைப்பயனும் உண்டாகும்படி செய்யக்கருதி, அதற்கு அறமென்னும் முறையையே ஓர் கருவியாகப் பெரியோரமைத்திருக்கின்றனர்.

பொருளும் இன்பமும் எல்லாப்பிராணிகளுக்கும் உரியனவாயிருக்க முதற்பேறாகிய அறமும், கடைப்பேறாகிய வீடும் மானிடர்க்கே சிறப்புப்பேறுகளாக அமைந்திருக்கின்றதை உய்த்துணர்க.

பொருளைமட்டும் கைப்பற்றிப்பேணி இன்பத்தையே நாடும் மாந்தர்களுக்கும் விலங்குகட்கும் எவ்வித வேற்றுமையும் இன்றெனப்புகல்வது மிகப் பொருத்தமாகும். ஏனெனில் பொருளும் இன்பமும் அனுபவிக்கப்படும்பொழுதே வேறு ஒருபேற்றுக்குக்காரணமாயமையாமல் கணத்திலழியுங்காரியமாய் முடிதலால் அவ்விரு பே

றுகளை மட்டும் நாடுபவர் மானிடராய்ப்பிறந்தும் பிறவாதவரேயாவர். ஆதலால் பொருளும் இன்பமும் அறத்தின் பயன்களெனக்கருதி அவ்விரண்டிற்கும் காரணமாகிய அவ்வறத்தையே பேணுவோர்க்குப் பொருளுமின்பமும் மென்மேலும் பெருகி வீடு பேறுங்கைகூடுமென்பது எல்லா நூல்களின் கருத்தாகவுமிருக்கின்றது. இதற்குச்சான்றாக வால்மீகி ராமாயணத்தில்,—

> 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌃 𑌖𑌲𑍁 𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑍇
> 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌧𑌰𑍍𑌮𑌫𑌲𑍋𑌦𑌯𑍇𑌷𑍁 ।
> 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑍍𑌯𑍁𑌰𑌸𑌂𑌶𑌯𑌂 𑌮𑍇
> 𑌭𑌾𑌰𑍍𑌯𑍇𑌵 𑌵𑌶𑍍𑌯𑌾𑌭𑌿𑌮𑌤𑌾 𑌸𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 ॥

என்னும் அழகிய வடமொழிச் செய்யுளை யாராய்ந்து பார்க்கலாம். அச்செய்யுள் அரசியலையும் அதனாலுண்டாகும் இன்பத்தினையுமே மேலாக நினைந்து வனம் புகுதலைக்கடிந்து பேசிய இலக்குவனை நோக்கி இரகுநாதனால் மொழியப்பட்டது. இதன் பொருள்:—

"ஐய! எங்கெங்கு அறமானது வளர்ந்து பலனளிக்கும் பான்மையையுடையதாக ஆகின்றதோ அங்கங்கே தான் காரணமாகிய அவ்வறமே அறம்பொருளின்பமென மூன்றுவடிவான காரியப் பொருள்களாய்ப்பரிணமித்து நிற்கின்றதைப் பார்க்கிறோம். அறனிருக்குமிடத்தில் அறம்பொருளின்பமாகிய மூன்று மிருக்குமென்பது எனது திண்ணமான கொள்கை. எப்படியெனில் (நெறிதவறாது மணந்த) மனைவி கணவனுக்கடங்கினவளாகவும் இல்வாழ்க்கையில் ஒத்து நடப்பவளாகவும் நல்ல புதல்வனைப் பெறுபவளாகவு மிருப்பள். இதன் கருத்து மனைவிஒருத்தியே அவ்வம்முறையாக அமைவதுபோல அறமே அறம்பொருளின்பமென மும்முறையாகவமையும். நன்னெறியொழுகாது போகத்துக்காகமட்டும் கைக்கொள்ளப்படும் ஓர் மடந்தைக்கு அம்மூன்று பான்மைகளும் பொருந்துமா?"

அறமானது மற்றை எல்லாப் பேறுகளுக்கும் காரணமாயிருப்பதுபற்றியே எல்லாப் புருஷார்த்தங்களுக்குள்ளும் அறமே முதன்மையுள்ளதெனக் கருதி அதை முதலாவது பேறாக வகுத்தனர் போலும். அங்ஙனம் அமைத்திருப்பினும் அறம் தொடங்கி வீடு

ஈருக ஓர் சக்கரம் வரைந்து பார்க்கில் அறத்துக்கோர்புறம் வீடாகவும், மற்றோர்புறம் பொருளாகவும், பொருளுக்கோர்புறம் அறமாகவும், மற்றோர்புறம் இன்பமாகவும், இன்பத்துக்கோர்புறம் பொருளாகவும், மற்றோர்புறம் வீடாகவும் அமைந்திருப்பதையும் நன்காராயவேண்டும். இதனால் விவரிக்கப்படும் கருத்து யாதெனில், பலனைக்கருதி யறம்புரிவார்க்குப் பொருளும் அதனைக்கருதாது அறம் புரிவார்க்கு மனத்தெளிவுண்டாகி வீடும், பொருளைத்தானே யுண்டுகளிப்போர்க் கின்பமும், பிறர்க்களித்து மகிழ்வோர்க்கு அறமும், பற்றுடன் இன்பம் நுகர்ந்து பொருளைத் தம்முடைய இம்மைப்பயனுக்கெனக் கருதுவோர்க்குப் பொருளும், பொருளைப்பற்றின்றியுண்டு (வடமொழியில்) அர்த்தவ்யூஹ காமவ்யூஹ மோக்ஷவ்யூஹ என்றும் யத்கரோஷி யதச்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் । யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்ப்பணம் ॥ என்றும் சொல்லியிருக்கிற முறைப்படி பொருளையுண்ணுமுடலையும் உடலுண்ணும் பொருளையும் உணவைப்பற்றி நிற்கும் ஆவியையும், ஈசுவரனுக்கே அர்ப்பணம் செய்வோர்க்கு வீடுங் கைகூடுமென்று நன்கு விளங்குகின்றது.

உலகத்தில் விளையும் எல்லாப் பாவங்களும் பொருள்பற்றியாவது இன்பம் பற்றியாவது நிகழ்வதால் அறம் ஒன்று சேராவிடில் அப்பொருளும் இன்பமும் கேட்டை விளைக்கும் பான்மையுடையனவாம். அக்கருத்தை விளக்கியே மாருதி, தசமுகனையும் அவன் வாழ்வையும் கண்ணோக்கியவுடன் அவனுக்கமைந்த பொருளையும் இன்பத்தையும் வியந்து, பிறகு அறமில்லாக் குறையினால் அவனுக்குக் கைகூடிய பொருளும் இன்பமும் அவனுக்குப் பழிப்பைப்புரிந்தனவென்று வருந்தினர். அதாவது யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேச்வர: । ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஸசக்ரஸ்யாபி ரக்ஷிதா ॥ இதன்பொருள்:—எல்லாவல்லமையும் பொருந்திய இவ்வரக்கர் கோமானுக்கு அறமில்லாக் குறைமட்டும் இல்லாவிடில் இவனே சுவர்க்க லோகத்துக்கு இடுக்கணின்றிக் காப்பாற்றுவனே; "அது மட்டுமா? கல்பாந்தரங்களில் மாறுபாடின்றி இவ்விந்திரனே அமரர்கோனாய் நிலைபெறும்படி காப்பாற்றுவனே என்று பரிதாபப்

பட்டனர். இஃதன்றியும், இராவணனுடன் அவர் பேசுங்காலையில்,

> 𑌨 𑌤𑍁 𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌮𑍍
> 𑌅𑌧𑌰𑍍𑌮𑌫𑌲𑌸𑌂𑌹𑌿𑌤𑌮𑍍 ।
> 𑌤𑌦𑍇𑌵 𑌫𑌲𑌮𑌨𑍍𑌵𑍇𑌤𑌿
> 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚𑌾𑌧𑌰𑍍𑌮𑌨𑌾𑌶𑌨𑌃 ॥

என்றும் மொழிந்திருக்கின்றார். இதன் பொருள்:— பொருளு மின்பமும் பாபத்துக்கே காரணம். அறமொன்று சேரில் பாவத்தைக்களைந்து அவ்விருபேறுகளும் அறத்தின் பயனுடையவாம் என்பது பொது வழக்கு. ஆனால் அவ்வறம் உன்னிடத்தில் இல்லை. முன்புரிந்த அறத்தின் பயனான உன்பொருளும் இன்பமும் இப்பொழுது அறத்தின் பயன் கலவாமல் உன் கேட்டுக்கே காரணமாயிருக்கின்றன என்பதாம்.

ஆரணிய காண்டத்தில் இராகவன் அறத்தினின்று வழுவுவரோ என்னும் சந்தேகத்தால் ஜானகி தன் கணவனுக்கு ஒரு சமயத்தில் அறத்தைப்பற்றி வியந்து கூறலுற்றாள். அதாவது:—

> 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌰𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑌿
> 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌸𑍁𑌖𑌮𑍍 ।
> 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌲𑌭𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂
> 𑌧𑌰𑍍𑌮𑌸𑌾𑌰𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ॥

இதன் பொருள்:— அறத்தினின்று பொருளுண்டாகின்றது அறத்தினின்றே இன்பமும் உண்டாகின்றது. அறத்தினின்றே யாவும் உண்டாகின்றன. அறமானது இந்தச்சகத்துக்கே சாரமாயிருக்கின்றது. மேற்கூறிய செய்யுட்களின் கருத்தையே இச்சுலோகம் விளக்குவதுடன், தர்மசாரம் இதம் ஜகதென்று ஒரு விசேஷக்கருத்தையும் குறிப்பிடுகின்றது. அறத்தை ஜகத்துக்குச் சாரமென்று மொழிந்ததினால் உடலுக்கு ஆவிசாரமாயிருப்பதுபோல ஜகத்துக்கு அறம் சாரமாயிருக்கிறதென்பது கருத்து. உயிரொழிந்த உடல் அக்கணமே சிதறிப்போவதுபோல அறமில்லாவிடில் உலகமே நில்லாதெனப் பொருள்படுகின்றது. ஏனெனில் அறம் நிறைந்த மனத்

தினியல்பே அன்பு, அன்பு ஒன்றே தெய்வத்தினிடத்தில் "அருள்" என்றும், தாயினிடத்தில் வாத்ஸல்யமென்றும், தந்தையிடத்தில் "தயை" என்றும், சகோதரர்களிடத்தில் "பற்று" என்றும், துணைவரிடத்தில் "நட்பு" என்றும், குருவினிடத்தில் "பொறுமை" என்னும், தம்பதிகளிடத்தில் "காதல்" என்றும், அரசனிடத்தில் "நீதி" என்றும், உதவிபெறுவோரிடத்தில் "விசுவாசம்" என்றும் பலவிதமாகப்பெயர்கொண்டு எல்லா உயிர்களையும் ஒன்றுக்கொன்று ஆதாரமாகவமைத்து வாழ்விக்கின்றது.

ஆகவே அன்புடன் அறம் இயற்றப்படவேண்டுமென்பது இன்றியமையாத முறை. காமம் வெகுளி முதலியவற்றோடு இயற்றப்படுவது அறமாகாது. ஆதலின்,

> "அழுக்கா றவா வெகுளி யின்னுச்சொ லான்கும்
> இழுக்கா வியன்ற தறம்",

என்று திருவள்ளுவ நாயனாரும் கூறியுள்ளார். மனத்தின்கண் அன்பு என்னும் இயல்பு பெருகி அது வெளியில் பிரவகித்தலே அறஞ்செயலாகும். விருப்பத்துடன் அறம்புரிவதே மேலானதென்று கருதி "அறஞ்செய்" எனப்புகலாமல், "அறஞ்செயவிரும்பு" எனக்கலைமகளின் பெருமை வாய்ந்த ஔவையாரும் அருளியிருக்கின்றார். அறத்தின் பெருமை இனைத்தெனக்கருதியன்றோ சிலபோழ்து கடவுளையே அறமென்று புகல்வதையும் கடவுளினும் அறத்தை மேன்மைப்படுத்திக்கூறுவதையும் காண்கின்றோம். அறநெறியைப் பஞ்சவர்க்குபதேசித்தருளும்படி கண்ணன் பீஷ்மரை வேண்டியகாலத்தில் அதற்கிணங்கி அவர் அறத்தியல்பு மொழியத்தொடங்கி முதலில் தெய்வ வணக்கம் கூறுகையில்,

> நமோ தர்மாய மஹதே
> நம: க்ருஷ்ணாய வேதஸே ।

என்று சொல்லி வணங்கியிருக்கின்றார். இதன்பொருள்:—பெரிதாகிய அறத்துக்கு வந்தனம். எல்லாம் அறிந்த கண்ணபிரானுக்கு வந்தனமென்பதாம். இதன் கருத்து அறமே ஒன்றிற்கும் கீழ்ப்படாதது. கடவுள் அறத்துக்குக்கீழாகியல்லவோ அதனைப் பே

னுமாறு உலகத்தின்கண் தாய் தந்தை அண்ணன் தம்பி நண்பன் எனப் பிறரை மருவிநிற்கின்றார். ஆதலால் ஒருவிதக்கட்டுக்கும் உட்படாத அறத்தை முதலினும் அறத்தின் கட்டுக்குட்பட்ட கடவுளைப்பின்னரும் பீஷ்மர் சங்கேதமாக வணங்கி அறத்தின் பெருமையை உலகினர்க்கு வியந்துரைத்திருக்கின்றார். இப்பெருமை வாய்ந்த அறம் உலகின்கண் மூன்றுவிதமாக அநுஷ்டிக்கப்படும்.

1. உலகனைத்தும் வாழ்க வெனக்கருதி அவ்வாழ்வு நிலையுறும் வண்ணம் தெய்வங்களைத்தொழுமுறையாகிய இஷ்டம் (அக்கினி, ஆகுதி, மந்திரம் முதலியவற்றால் வேள்வி மூலமாய் ஆராதித்தல்.)

2. எல்லா உயிர்களும் இடுக்கணின்றிச் சுகமுறும் வண்ணம் இயற்றுமுறையாகிய பூர்த்தம். (வித்தியாசாலை, அன்னசத்திரம், தண்ணீர்ப்பந்தல், உறங்குமிடம், வைத்தியசாலை முதலியன).

3. எளியோர்க்கிரங்கி ஈதலென்னும் தத்தம் (பசித்தோர்க்கு உணவளித்தல் முதலாக வறியோர்க்குச் செய்யும் பொருளுதவி).

இவற்றுளிஷ்டமென்பது வர்ணம், ஆச்சிரமம் இவைகளின் பான்மைக்குத்தக்கவாறு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளமையால் அதைப்பற்றி விசேஷமாகஇங்குஎடுத்துரைப்பது அவசியமின்று. மேலும்யுகபேதம்,ஆசாரபேதம், கொள்கை வேற்றுமை முதலியவற்றால் எக்குமே இக்காலத்துக்குத்தகாதெனச் சிலபெரியோரின் அபிப்பிராயமுமிருக்கின்றது. இஷ்டத்தின் பயனும் பிரத்தியட்சமானதில்லை. ஆகவே பிரத்தியட்சப்பயனையுடைய வாயிருக்கும் மற்றை யிருவிதஅறங்களுந்தான் நம்மால் அநுஷ்டித்து நம் கண்முன்னர் அவற்றின் பயனைப் பிறர் அடைவதைக்காணும் முறைகளாகின்றன. ஆகவே,

சமஷ்டி யறமாவது பூர்த்தம். வியஷ்டி யறமாவது தத்தம். இவ்விருமுறைகளையும் அன்பினுடன் அநுஷ்டிக்கும் பான்மை எல்லா வருணத்தார்க்கும் விதிக்கப்பட்டுள்ளன. உயிரனைத்தையும் பாதுகாப்பது கடவுளின் கடமையாயிருப்பதால் அவ்விருமுறைகளாலும்அன்புட னற மியற்றுவோர்களைக்கடவுள் “[illegible]” என்று வியந்து அவர்கள் தன்னிலையாகிய பிர்ம்மத்துக்கு உரியவர்களென்று பகவத்கீதையால் உறுதி கூறியிருக்கின்றார். பூர்த்தமென்னும் சம

ஷ்டியறமானது ஓர் பொழுது ஸ்தாபிக்கப்பெற்றால், அவ்வறம் பின்னர்ப்பழுதின்றியும் பிறருடைய தீவினைகளுக்குக்காரணமாயமையாமலும் எக்காலும் அறமாகவே நிலைத்திருக்கவேண்டியது முக்கியமானது. அவ்வாறு நிலைத்திராமல் அறம் பழுதுறும்பட்சத்தில் அதன் வலிகுன்றி அதை ஸ்தாபித்த புண்ணிய சீலர்களுக்கும் பரலோகத்தில் மனத்துயரத்தை விளைவிக்குமென்றுகருதி, "பூர்த்தம்" என்னும் அறமியற்றிய பெரியோர் அனைவரும் அவ்வறம் பழுதுறுவண்ணம் தாமிரசாசன முதலிய பத்திரிகைகளில், இவ்வறத்துக்குத் தீங்குவிளைவிப்போர் "கங்கைக்கரையில் காராம்பசுவைக்கொன்ற" பாவத்திற்கும், பிர்ம்மஹத்தி சிசுஹத்தி முதலிய பாதகங்களுக்கும் உள்ளாவாரெனப் பயமுறுத்தி மிக்க கவலையுடன் வரைந்திருக்கின்றதை நாம் காணலாம். பூர்த்தமென்னும் சமஷ்டியறம் குலைவின்றி நன்கு விளங்கி வரும் காலம்வரையில் அவ்வறத்தை ஸ்தாபித்தோர் மிக்க ஆநந்தத்துடன் சுவர்க்க லோகத்தில் வாழ்வாரென்று ஸ்மிருதிகளினும் புராணங்களினும் கூறியிருக்கின்றன. வியஷ்டி அறமாகிய தத்தமானது இருவகைப்படும்:—1. உணவளித்தல், 2. காலம் தேசம் பாத்திரம் இம்மூவகைப்பண்பினும் ஆராய்ந்து நல்குதல். இவ்விரண்டில் அன்னமளித்தலே மேலாகும். ஏனெனில் நாமுதவும் அன்னமானது உடனே பசியகற்றி உயிர்காததுப் பயனளித்து விடுவதால் அவ்வறம் பின்பு தீது விளைக்கக் காரணமில்லை. பசியால் வருந்தும் ஓர் பிராணிக்கு உணவளிக்கக் காலம் தேசம் பாத்திரம் முதலிய நியமமொன்றும் பார்க்கவேண்டியதில்லை. உணவன்றி வேறொரு பொருளை அளிக்கவேண்டுமெனின் கொள்ளுவோன் குணமுதலிய வற்றைக் கருதவேண்டும். ஏனெனில் கொள்ளுவோன் சான்றோனையின் அவன் கொள்ளும் பொருளால் நல்வினைபுரிந்து அவ்வினைப்பயனால் தன்னையும் தனக்கீந்தானையும் மேன்மைப்படுத்துகிறான். அம்முறையே மீன்பிடிப்போனுக்கு உதவும் ஒரு காசானது தூண்டின் முள்ளாகவமைந்து அதைக்கொண்டு அவன் பல மீன்களைப் பிடித்துக் கொல்லவும் அப்பாதகத்துக்கு அவனுடன் அக்காசை யளித்தோனும் உள்ளாகவும் நேரிடுமென்பது நூல்களின் கருத்து. ஆகவே நம் நாட்டில் தொன்று தொட்டு நல்லோர்களித்தலும் தீயோர் வருந்துவதுபோல அபிநயிக்கினும் அவர்களுக்கு அன்னமொன்றே

ழிய வேறென்று அளியாது அகற்றலும் வழக்கெனக் கொள்ளற்பாற்று.

இக்காலத்தில் அறம் புரிதலே தனக்குக்குறைவுக்குக் காரணமாயிருப்பதாலும், அவற்றின் பயன் இவ்வாறென்று ஐயமறப்புலப்படாததாலும், அறம்புரிவது வறுமைக்கிடமென்று பலர் நிந்திப்பதை நாம் காண்கின்றோம். முன்னம் அறம்புரியாது உடலெடுத்தோர்மனந்தான் அப்பழுதான நினைவையுடையதாகும். உடலுக்கு வேறாக ஆன்மாவின் நிலைமையையும் உடலொழிந்த பின் அவனுக்கு அமையும் கதியையும் பரலோகம் உண்டென்னுங்கருத்தையும் கைக்கொள்ளாதார்க்குஅறமென்பதில்லை. மற்றையோர்க்குப்பரலோகமே அன்னவர் சொந்த நாடு: அவர்பிறந்துழலும் இக்கருமபூமி அவர் நாட்டுக்குவேறாகிய கண்டி, சிங்கப்பூர் முதலிய தீவாந்தரங்களுக்குச் சமானமாகும். அங்குச் சென்று அவர்கள் ஈட்டுந்திரவியத்தை அவர் சொந்த நாட்டிற்செல்லக்கூடிய உண்டிலாக யாற்றி கைக்கொள்வோர்க்குப் போயிருக்குமிடத்தில் செலவிடச்சிறிது பொருள்மட்டும் மீந்திருப்பில், அவர் திரவியமற்ற வறியராவார்களா? அறம் புரியுமாந்தர் தங்கள் நாடுசென்றவுடன் தாங்கள் கொணர்ந்த உண்டியலைப்பணமாக்கி வாழ்வுபெறும் பான்மையையுடையவர்கள். ஈட்டிய பொருளனைத்தையும் அத்தீவாந்தரத்திலேயே செலவிட்டுப்புசித்து உண்டியலின்றித் தங்கள் நாட்டுக்குச்செல்வோருடைய பான்மையும், அறமியற்றாமல் தாமே உண்டு காலங்கழித்து மரிப்போருடைய பான்மையும் ஒன்றாகும். தீவாந்தரத்தில் ஈட்டுவோர் கைக்கொண்டு திரும்பிவரும் உண்டிலுக்குச்சமானமாக அறமியற்றிப்பின்னர் பரலோகம் செல்வோரைப்பின்தொடரும் அறத்தின் வலியை அபூர்வமென்றும் அதிர்ஷ்டமென்றும் தர்மசூத்திரகாரர்கள் புகல்கின்றார்கள்.

அறச்செயலினால் அறம் புரிவோனுக்கு மட்டும் பெருமையன்று. அன்பென்னும் உயர்ந்த பண்பானது அவனிடம் பெருகியிருப்பதால் அவ்வன்பு அவன்வழி வரும் சந்ததியாருக்கும் இறங்கி அவன் குலத்தையே பரம்பரையாகச் சிறப்பிக்கின்றது. ஆதலாற்றான் "இட்டார்பெரியோர் இடாதாரிழிகுலத்தோ" ரென்று இடாதார் குலத்

தையே இகழ்ந்துகூறியிருக்கின்றனர். அவ்வாறே கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் ஸ்ரீராகவனை நோக்கி, வாலி:—

"கோவியற்றருமமுங்கள்குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத்தெழுதவொண்ணுவுருவத்தாயுடைமையன்றோ
ஆவியைச் சனகன்பெற்றவன்னத்தையமிழ்தின்வந்த
தேவியைப்பிரிந்தபின்னைத்திகைத்தனைபோலுஞ்செய்கை"

என்று புகன்றதாகக்கூறியிருக்கின்றனர். பின்னர் "இரக்கமெங்குகுத்தாய்" என்று வேறோர் செய்யுளில் கம்பர் கூறியிருப்பதற்குக்காரணம், அறமியற்றிய குலத்திற்பிறந்தோனாகிய இராமன் தன்னுடைய பிறவிக்குணமாகிய இரக்கத்தை எங்கேயாவது உகுத்தாலொழிய வாலியைக்கொல்வதற்கு அவன் உடன்பட்டிரானென்று புகன்றதுபோலவும் பொருளாகும்.

மேற்கூறியவண்ணம் வியஷ்டி அறத்தில் அன்னமிடுவதை மேலாகக்கொண்டிருக்குமாறு ஸமஷ்டி அறத்தில் வித்தியாசாலையை மேலாகக்கொண்டிருக்கின்றனர். இன்னகாலத்தில் அறமியற்றவேண்டுமென்கிற முறையாவது, இன்றியற்றாமல் பின்னரியற்றலாம் என்று காலங்கழிப்பதாவது பொருந்தாவென்பது பெரியோர்கொள்கை.

"காலைச்செய்வோமென்றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய்வாரே தலைப்படுவார்"

எனவும்,

𑌶𑍍𑌵𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌦𑍍𑌯 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌹𑍍𑌨𑍇 𑌚𑌾𑌪𑌰𑌾𑌹𑍍𑌨𑌿𑌕𑌂 ।
𑌨𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌕𑍃𑌤𑌮𑌸𑍍𑌯 𑌨𑌵𑌾𑌕𑍃𑌤𑌂 ॥

எனவும் மூத்தோர் வசனங்களுமுண்டு.

திருவரங்கத்தமுதனார்.

—:o:—

ஸ்ரீ வைஷ்ணவர்களால் பிரபன்ன காயத்திரியென்று கொண்டாடப்பெற்ற இராமாநுஜநூற்றந்தாதி பாடியவர் திருவரங்கத் தமுதனார். இவர் திருவவதாரஸ்தலம் திருவரங்கம்; குடி மூங்கிற்குடி. இவர் தந்தையார் பெயர் அணியரங்கத்தமுதனார். வாக்மியாய், ராஜவல்லபராய், பெரியகோயில் புரோகிதராய், இவர் உடையவரை (ஸ்ரீராமாநுஜரை) மதியாதே காரியநிர்வாகம் செய்துவந்தார். பெரியகோயில் நம்பி என்று பட்டந்தரித்து வெகு பெருமையுடன் விளங்காநின்ற இவரை உடையவர் திருவரங்கத் திருப்பதியினின்றும் வெளிக்கிளப்ப யத்தனித்திருக்கையில், பெரிய பெருமாளான திருவரங்கர், உடையவர் கனவிலே, "பெரியகோயில் நம்பி வெகுகாலமாய் நம்மைநம்பியிருக்கிறார், திருவுள்ளமானபடி செய்யவேண்டும்" என்று அருளிச்செய்ய, உடையவரும் கண்விழித்தெழுந்து, தம் அந்தரங்க சிஷ்யரான கூரத்தாழ்வானையழைத்து, "பெருமாளுக்கு நம் சத்துருவான பெரியகோயில் நம்பியிருப்பதே திருவுள்ளமாயிருக்கிறபடியாலே, நமக்கு இவ்விடத்தில் காரியமொன்றுமில்லை. ஆதலால் நாம் பெருமாள்கோயிலேற(காஞ்சீபுரம்)ப்போவோம்" என்று சொல்ல, ஆழ்வானும், "பெருமாள் அந்தப்படி அருளிச் செய்தபோதே அவரை அநுகூலராய்த் திருவடிகளிலே ஆசிரயிக்கும்படி பண்ணியருளுவர்" என்று விண்ணப்பஞ்செய்தார். உடையவர் "ஆகில் அவரைத் திருத்தும்" என்று ஆழ்வானுக்குச் சாதித்தார். ஆழ்வானும் நாளடைவிலே அமுதனாரைவசப்படுத்தி உடையவர் திருவடிகளிலாசிரியப்ப, உடையவரும் அவரை கடாக்ஷித்து கிருபைபண்ணினார். சிலகாலத்துக்குப் பின் அமுதனார்க்கு மாதுர்வியோகமாய் பத்துநாளைக் கருமங்களும் கழிந்தவாறே, ஏகாஹத்துக்கு பந்துக்களைக்கொண்டு நடத்த வொண்ணாமையாலே, உடையவர் சந்நிதியில் சென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவர் ஆழ்வானை அழைத்து, "நீர்போய் ஏகாஹத்தைப் புஜித்து நிறைவேற்றும்" என்று கட்டளையிட்டார். ஆழ்வானும் நியமனப்படியே புஜித்து உத்தாபோஜநஸமயத்திலே, பெரியகோயில்நம்பிகையில் அவரதாய் இதுகாறும்

நடந்துவந்த கோயில்பௌரோகித்தியமும் புராணபடனமுமான காணியாட்சியை தானம்பண்ணுவித்துக் கொண்டு, தானசாஸனமும் வாங்கிக்கொண்டுவந்து உடையவர் மடத்திலே சமர்ப்பித்தார்.

இவ்வாறு கோயில் பௌரோகித்தியமும், புராணபடனமும், பிரமரதமேறும் மரியாதையும், ஆழ்வானுக்குத் தானம் பண்ணி விட்டு தாம் கோயிலிலே ஒரு சம்பந்தமுமில்லாமலிருந்த அமுதனாரிடத்தில் உடையவர் இரங்கி, வித்துவானான திருவரங்கத்தமுதனார் இப்படி ஒழிந்திருக்கலாகாது என்று நினைத்து, பெருமாள் முன்னிலையில் பிரபந்தங்களை யிசையுடன்பாடும் பிள்ளை திருவரங்கப்பெருமாளரையரைக் கூப்பிட்டு, "இன்றுமுதலாக இயற்பாவை நீங்கள் சேவிக்கவேண்டாம், இனி அமுதனாரே சேவிக்கவேண்டும்" என்று நியமித்து, அமுதனாருக்குமவ்வாறே கட்டளையிட்டருளினர். அது முதல் இயற்பா சேவிக்கும்நாளில் அரையருக்குச்செல்லும் மரியாதை வரிசையெல்லாம் அமுதனாருக்கு சாதிக்க நியமித்து, இயற்பாவைச் சேவித்து சாற்றினபின்பு அரையருக்கு நடக்குமாப்போலே வரிசையுடனே திடன் வீட்டிலே விடுவித்தருளும்படி உடையவர்கட்டளையிட்டார். அதுமுதல் இன்றும் அம்மரியாதை அவர் சந்ததியாருக்கு நடந்துவருகிறது.

இவ்விஷயங்களெல்லாம் முடிந்தபின்பு அமுதனார் எம்பெருமானார் (உடையவர்) விஷயமாகக் கலித்துறையில் ஓர் நூற்றந்தாதி பாடினர். அதனைப் பெரியபெருமாள் ஒரு ஸப்தாவரணத்திருநாளையிலே, உடையவரைத்தம்முடனேகூட வரவேண்டாமென்று நியமித்தருளி திருவீதியிலே சகல வாத்தியங்களையும் நிறுத்தி, ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுசந்திக்கக்கேட்டருளிப்போரவு கந்தருளினர். அதுமுதலாகப்பெருமாள் நியமனத்தால் இயற்பா அநுசரித்து முடிந்தவுடனே நூற்றந்தாதியை வரிசையுடனே கேட்டருளுகிறார்.

இவ்வந்தாதியை வேதப்பிரான் பட்டரென்பார்,

"இனியென்குறைநமக்கெம்பெருமானார் திருநாமத்தில்
முனிதந்தநூற்றெட்டுச்சாவித்திரியென்னுநுண்பொருளைக்
கனிதந்தசெஞ்சொற்கலித்துறையந்தாதிபாடித்தந்தான்
புனிதன்திருவரங்கத்தமுதாகியபுண்ணியனே."

"முன்னைவினையகலமூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும்—என்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன்தென்புலத்தார்க்
கென்னுக்கடவுடையேன்யான்."

"நயந்தருபேரின்பமெல்லாம்பழுதின்றிநண்ணினர்பால்
சயந்தருகீர்த்தியிராமாநுசமுனிதாளிணைமேல்
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்குமன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதியோதவிசைநெஞ்சமே."

என்று புகழ்ந்து பாடியிருக்கிறார்.

இவ்வந்தாதி முக்கியமாய் இராமாநுஜரையும், ஆழ்வார்களையும் மற்றுஞ் சிற்சில ஆசாரியர்களையும் புகழ்ந்து பாடப்பட்டது. சொற்சுவையும் பொருட்பொலிவுமுடையது. இது ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்தியம் அநுசந்திக்கவேண்டிய காயத்திரி சாம்மியமான நூல்.

அமுதனார் வமிசத்தார் இற்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் வடக்குச் சித்திரைவீதியில் குடியிருந்து கோயிலில் மரியாதைபெற்று வருகிறார்கள்.

து. அ. கோபிநாதராவ்,

ஸ்ரீரங்கம்.

திருக்குற ளாராய்ச்சி.

(௦)

(முற்றொடர்ச்சி.)

குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய கடவுளோடியைபுண்டாயினும் அம்மூன்று பொருளையும் பொதுவகையாற் கூறாது அறம் பொருளின்பமெனச் சிறப்புவகையாற் கூறலுற்றார்க்கு அங்ஙனமே அம்மூவரையுஞ் சிறப்புவகையாற் கூறலேமுறை. அங்ஙனமன்றி, அம்மூவர்க்கும் பொதுப்படக்கூறினாரெனல் ஆசிரியர் கருத்தாகாமை காண்க.

இலக்கிய முடிதற்பொருட்டு மங்கலவாழ்த்துக்கூறல் ஆன்றோர் வழக்கேயாதலின் இந்நூலகத்தும் அதுவேண்டுமாலெனிற்,கவிதான் வழிபடு கடவுளையாதல் ஏற்புடைக்கடவுளையாதல் பயன்குறித்தாயினும்இன்றியாயினும்பிறர்க்குப்புலனகாவாறு அகத்துவாழ்த்தலே நியமமாகலானும் அவ்வொழுக்கத்தை மாணக்கருங்கடைப்பிடித்தொழுகுமாறு புறத்தே செய்யுளானும் வாழ்த்தல் நியமந்தப்பலானும் அது தொல்காப்பியனர் செய்யுளான் வாழ்த்தாமையானுணரப்படுமாகலானும் நீத்தார்பற்றுவிடற்குப் பற்றற்றான்பற்றினைப்பற்றலன்றிவீடெனினும் பயன்வேண்டிப்பற்றுராகலின் வள்ளுவனர் இலக்கியமுடிதற் பயன்வேண்டி வாழ்த்தினரெனின் அவர்பெருமைக்கேலாமையானும் பயன்வேண்டாது ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டு அகத்தேவாழ்த்தினும் "ஒன்னார்த் தெறலுமுவந்தாரையாக்கலு மெண்ணிற்றவத்தான் வரு" மென்றுராகலின் அரியவாயினும் பெரியார்க்குஎளிதின்முடிதல் இயல்பாகலானும் ஆசிரியர் அகத்தியனர் தொல்காப்பியனர் முதலாய அறிவரைப்போன்றே வள்ளுவனரும் மறுவில செய்தி மூவகைக் காலமுமுணர்பாகி அகத்தின்கட் கடவுளை முக்காலத்தும் வாழ்த்தும் இயல்புடையராகலானும் இவ்வியல்புண்மை ஒழுக்கவகையுள் முதன்மைத்தாகக் கொண்டுகூறிய கடவுள் வாழ்த்ததிகாரத்தானு முணரப்படுமாகலானும் ஞானபூரணராகிய திருவள்ளுவனர் ஆசிரியர்தொல்காப்பியனர்போல இலக்கியமுடிதற்காரணமாய மங்கலவாழ்த்தைச்செய்யுளாற் கூறாது ஆன்றோராசாரந்தப்பாவண்ணம் அகத்துக்கூறினரெனக்கொள்க. மங்கலவாழ்த்தில்லாவழி நான்முற்றுமென்பது தேற்றமாகலானும் இந்நான்முற்றினமையானும் ஆசிரியர் நூற்குப்புறமாக அகத்தேவாழ்த்தினரென்பது உய்த்துணரப்படும்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

இப்பாட்டு என்னுதலிற்றோவெனிற் கடவுள்காட்சியனுமானத்தானுங்காமே புணர்பொருளன்மையின் மறைமுதலாய நூலுட்கூறப்பட்ட அப்பொருளை அநுமான அளவையானுமுணர்த்தி வலியுறுத்துதல் நுதலிற்றென்பது. இதன்பொருள்-எழுத்துக்களெல்லாம் அகரமாகியகாரணப்பொருளான்முதற்றொழிற்படலுடைய: அதுபோல,

உலகம் ஆதிபகவனுகியகாரணப்பொருளான் முத்தொழிற்படலுடைத்து. பொருளடை உவமைக்குமெய்துமாகலிற் பகவனையடுத்துநின்ற ஆதியென்னும் அடையை அகரத்தொடுங்கூட்டி ஆதியாகிய அகரமெனட. அகரமுதல—அகரமாகிய காரணத்தையுடையனவென்க. எழுத்தெல்லாம்-எழுத்தின் வகைகளெல்லாமென்க. எழுத்து ஒலிவடிவெழுத்தும் வரிவடிவெழுத்துமென இருவகைப்பட்டு அவை ஒவ்வொன்றும் பலவாகுமென்க. எழுத்து-தொழிற்பெயர். அஃதெழுதப்படுமியல்பினவாய் ஒலிவடிவையும் வரிவடிவையு முணர்த்தலின் ஆகுபெயர். அது பால்பகாவஃறிணைப்பெயராதலின் ஈண்டு அதன் வகைகளாகிய பன்மையை யுணர்த்திற்று. ஆதிபகவன் முதற்று- ஆதிபகவனுகிய காரணத்தை யுடைத்தென்க. முதல்-காரணம். அஃது அஃறிணையுட் பன்மையானும் ஒருமையானும் முதலவென்றும் முதற்றென்றும் ஆயிற்று. உலகென்பது உயிரும் உயிரல்பொருளுமென இருபாற்ருகிய பிரபஞ்சத்தொகுதி. ஆதி அகரமாவது, அகரவுயிர்க்கும் உயிராய்ச் செவியிற்கேட்கப்படுதலு மெழுதப்படுதலுமின்றி நாதமாத்திரையான் அகத்திசைக்குமொலியாம். அகரமாவது செவியிற்கேட்கப்படுதலும் எழுதப்படுதலுமுடைத்தாய்ப்புறத்திசைத்து உயிர்வருக்கத்துள் முதலாவதாக நின்ற அகரவுயிராம். எழுத்தென்றது,தமிழேயன்றி வடமொழிமுதலாய மொழிகளினுஞ் செவியிற்கேட்குமாறு புறத்திசைத்துப் பலப்பலவாக வழங்கும்அகரவுயிர் முதலாய எழுத்துக்களை. இங்ஙனமொலி யிருவகையாதலை ஆசிரியர் தொல்காப்பியனார்.

அகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே
யஃதிவணுவலா தெழுந்துபுறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளபு நுவன்றிசினே.

எனக்கூறுமாற்ருனறிக.

பின்னர் எழுத்தென்று காரணப்பெயர் கூறியாங்கு முன்னரு மகரவெழுத்தென்ருவது அகரவுயிரென்ருவது கூருமல், அகரமெனக்கூறினமையானும், பொருளடை உவமைக்குங்கோடல் இலக்கணமாகலானும், பின்னர் அகரவுயிருடங்குமாறு எழுத்தெல்லாமென விதந்துகூறினமையானும் இவ்வகரம்எழுதப்படும் அகரவுயிரையுணர்

த்தாமல் எழுதப்படாத ஆதிஅகரத்தை யுணர்த்திற்று. ஆதிஅகரமெ
னக்கொள்ளாதுபுறத்திசைக்கும் அகரவுயிரெனக்கொண்டு, அகரவுயி
ரொழிந்தபிறவெழுத்துக்கள் அகரவுயிரை முதலாகவுடையனவென்
றும், இப்பாட்டுத் தமிழாதலிற்றமிழெழுத்தே அகரத்தைமுதலாகவு
டையனவென்றும்,அகரம் ஒலிவடிவிற்கேகாரணமாதலன்றிவரிவடிவி
ற்குக்காரணமாகாதென் றும்பொருள்கொண்டு,பயங்காமற்புறத்திசை
க்கும்அகரவெழுத்தும் தமிழெழுத் தேயன்றிவடவெழுத்துமுதலாய
பிறவெழுத்தும் வரிவடிவெழுத் துங்கோடற்பொருட்டு,எழுத்து அக
ரமுதலவெனினும் அது பால்பகாஅஃறிணைப் பெயராகலிற் பன்மை
யறியப்படுமாயினும் அங்ஙனம்கூறாமல் எழுத்தெல்லாமெனவிதந்து
கூறினர். எழுத்தெல்லாமென்றாற்போல உலகெல்லாமெனக்கூறின்,
உயர்ந்தோரும் உயிர்களும் இடமுமென அவற்றுளொன்றது பன்
மையே யெஞ்சாதுணர்த்தலின் அங்ஙனங்கூறாமல்- சேனையென்பது
வீரரதுபன்மையுணர்த்தினுஞ்சொல்லால்ஒருமையாகநின்றாங்கு-உல
கென்பதும் ஒருமையாகநின்று உயிரும் உயிரல்பொருளுமென விர
ண்டனது தொகுதியெல்லாவற்றையு முணர்த்துமியல்பிற்றாதலின்
முதற்றென ஒருமையாற்கூறினர். கடவுளது அளவில்பெயர்களுட்
பிறகூறாது உலகந்தோன்றுதற்கு அவன் குணங்கள் பலவற்றுள் ஈச்
சுரத்தன்மைமுதலாய ஆறுகுணங்களுமின்றியமையாக்காரணமாகலி
ன், அவற்றை யுணர்த்தற் பொருட்டு அக்குணங்கட்குப் பொதுப்
பெயராகிய பகமென்னு முதனிலைபுணர்த்துப் பகவனெனக்கூறினர்.
ஆதிபகவனெனற்குத் தனக்கோராதியின்றி உலகிற்கு ஆதியாய்நின்ற
பகவனெனப் பொருள்கொள்க. நிலையுடைப்பொருளாகிய ஆதிபகவ
னும் நிலையில்பொருளாகிய உலகுமென இவ்விரண்டன்றிப்பொருள்
பிறிதின்மையானும் இவ்விரண்டனுள் உலகிற்கு ஆதிபகவனெனவே
பகவனுக்காதி பிறிதொன்றில்லை யென்பது தானேபோதரல்காண்க.
பதி பசு பாசமெனப் பொருள்மூன்றெனிற் பசுபாசமிரண்டும் உல
கெனப்படலின் அமையுமென்க. அகத்திசைக்கும் அகரமு மூவகைநி
லையான் முத்திறப்படலின், ஆதி அகரமெனற்கு அம்மூன்றனுள்ளும்
முதலாவதாகிய அகரமென்க. உவமைத்தன்மையைப்பொருளுக்குங்
கோடல் வழக்காறுதலானும் ஆதி அகரம் அருவமாதலானும் அருவ
மாகிய ஆதிபகவனென்க.

எழுத்துக்களது தோற்றமு நிலையுமொடுக்கமுஞ் செவியானும், உலகினது தோற்றமு நிலையுமொடுக்கமும் ஐம்புலத்தானு முணரப்படலின், முதல முதற்று எனபவற்றுள்ள குறிப்புவினையை விரிப்புழி முதலாற்றோன்றி நின்றொடுங்குமென விரித்துக்கொள்க. இங்ஙனங் குறிப்புவினை மூன்றுவதுருபானும் விரிதலை வலையான்முயன்றுண்பவன் வலையனெனப் பிரயோகவிவேகங் கூறலானுமுணர்க.

முதல முதற்றெனற்கு முதலான் முத்தொழிற்படுமெனச் சொல்லிலக்கணம்பற்றி யுரைப்பினும் முத்தொழிற் படலான் முதலுடையவென்பதே கருத்தாகக்கொள்க. இங்ஙனம் இம்மலை தீயுடைமையாற் புகையுடைத்து எனினும், புகையுடைமையாற் றீயுடைத்தெனக்கருதப்படுதல் காண்க.

உலகு காரணமுடைத்தன்றென்பார்க்கு இவ்விவ்வேதுக்களாற் காரணமுடையதே யெனவும், காரணமுடைத்தாயினும் பகவன் காரணனாகானென்பார்க்கு இவ்விவ்வேதுக்களான் அவனே காரணமெனவுந் துணிதற்பொருட்டும், அவன் காரணனாயினும் அவற்குத் துணையாகப் பிறகாரணமும் வேண்டுமென்பார்க்கு இவ்விவ்வேதுக்களாற் பிறகாரணங்கள்வேண்டா: பகவனே காரணமெனப் பிரித்தற்பொருட்டுங்கூறினாராகலின், முதற்றே என்பதன்கண் ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாமெனக்கொள்க.

இவ்வநுமானத்தில் உலகு பகவனாகிய காரணத்தையுடையதே என்பது மேற்கோள். குறிப்புவினையிறுதிநிலையால், விரிந்த முத்தொழிற்படலென்னும் வினை ஏது. யாது யாது முத்தொழிற்படலுடைத்து அது அது காரணமுடைத்து என்பது வியாத்திவாசகம். எழுத்துக்கள் தொழிற்படற்காரணத்தையுடையவாயினாற்போலஎன்பது எடுத்துக்காட்டு. இங்ஙனம் மேற்கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டுங் கூறியுணர்த்தலின் இது பிறர்பொருட்டனுமானமாம். புகைத்தோற்றத்தால் அனலாகிய காரணமுண்மை யறியப்பட்டாற்போல உலகத்தோற்றத்தாற் பகவனுண்டென உணர்த்தலின் ஆதிபகவனென்னுங்காரணம் துணிபொருளெனப்படுஞ் சாத்தியமாம். உலகந்துணிபொருட்கிடமாகிய பக்கமாம். பக்கமாகிய உலகு சாத்தியமாகியகாரணத்தையுடைத்தென்பது மேற்கோள். சொல்வோன் கேட்போ

னென இருவரானுமறியப்பட்ட உலகு சொல்வோனு லறியப்பட்டுக் கேட்போனாலறியப்படாததாகிய காரணமுடைத்தென்னும் விசேடணம் பெற்றமையிற் பக்கமாயிற்று. முன்னுணர்வின்றெனினும் ஏதுவாற் பின்னுணர்பொருளே சாத்தியமாதலின் ஈண்டு முதலென்பது சாத்தியமாயிற்று.

எழுத்துக்கள் காரணத்தானன்றி இயங்காமை யாவரானுமறியப்படலின் அவை சபக்கமாம். திட்டாந்தத்தின் உறுப்பாகலின் யாது யாது முத்தொழிற்படலுடைத்து அது அது காரணமுடைத்தென்பது வியாத்திவாசகம். இஃதுய்த்துணரப்படுமாகலின் விதந்து கூறிற்றிலர். செய்யுளாதலிற் போலவென்னு முருபு தொக்கது. துணிபொருளில்லாத நிலைக்களன் விபக்கமெனப்படுமாதலின் ஈண்டுத் தனக்கொருகாரணமில்லாத கடவுளொப்ப நியாயவைசேடிகர்முதலாயினார் தாம் நித்தமெனக்கொண்டபொருளைக் காரணமில்பொருளென்றாராயினும் அஃதெல்லார்க்கு முடன்பாடன்மையின் விபக்கத்தையுதாரணமாக்காது சபக்க திட்டாந்தங் கூறினார். இது சாதன்மிய திட்டாந்தமெனப்படும். குட முதலாயபிறகூறின் அவைஅழிந்தபின் முன்னிருந்தபடி மீண்டுந் தோன்றலின்மையின் அவற்றையொழித்து இவ்வுலகு சங்காரகாலத்திற் காரணத்துளொடுங்கிச்சிருட்டிகாலத்தில் முன்னிருந்தபடியே மீண்டுந் தோன்றலானும், அவ்வண்ணமே எழுத்துங் காரணத்து ளொடுங்கி முன்னிருந்தபடியே மீண்டுந்தோன்றலானுஞ் சபக்கத்துள்ளு மெழுத்துக்களே கூறினார். விபக்கம் உதாரணமாகவரின் வைதன்மியதிட்டாந்தமாம்.

இம்மூன்றுறுப்பொடு உபநயநிகமனமென விரண்டு கூட்டி ஐந்துறுப்புக் கூறுவாருமுளர். அவையிரண்டும் எடுத்துக்காட்டுளடங்கும். "ஒட்டிய உபநயநிகமனமிரண்டுந்திட்டாந்தத்திலே சென்றடங்கு"மென்றார் கூலவாணிகன் சாத்தனாரும்.

அநுமான மூவகைப்படும். பூருவக்காட்சியனுமானமுங் கருதலனுமானமும் உரையனுமானமுமென. அவற்றுளிஃதுரையனுமானமாம். கடவுள் காட்சிப்பொருளுங் கருத்துப் பொருளுமாகாமல் உரையளவையாற் கொண்டபொருளாகலின். இனிச் சொல்வோன் தான்கூறும்பக்கத்தினுங் கேட்போன் பிறிதொருபக்கத்தினுமுணர்

ந்தபொருளே சாத்தியமாதல் வேண்டுமாதலானும் ஈண்டுச்சாத்திய மாகிய பகவன் சொல்வோற்குணர்பொருளாய்க் கேட்போரில் உரை யளவை கொள்ளாதார்க் குணர்பொருளாகாமையானும் பகவன்மு தற்றே யுலகென்பது அப்பிரசித்தவிசேடணமென்னும் பக்கப்போலி யாகுமெனிற் பகவனையுடைத்தென்றது பகவனாகிய காரணத்தை யுடைத்தென்றாராகலிற் பகவனாகிய சாத்தியச்சிறப்புக் காரணமா கிய சாத்தியப்பொதுமையை விசேடித்து நிற்றலானும் அக்காரண ந்தான் யாவரானுங் காரியமுள்ள வழிக்கண்டபிரசித்த விசேடண மாகலானும் அங்ஙனமாகாதென்க. அற்றாயின் உலகு முதற்றெனா லேயமையுமெனின் உரையளவைக் கொண்டார்க்குக் கேள்வியாற் பகவனுணர் பொருளாதல் பற்றி, அவர் காரணமுடைத்தெனப்பொ துவகையாற் கொளலேயன்றி இக்காரணமுடைத்தெனச் சிறப்புவ கையானுந்துணியுமாறு பகவன் முதற்றேயென்றார். அப்பிரசித்தம் = அறியப்படாதது. (தொடரும்.)

அ. சண்முகம்பிள்ளை.

நம்பிக்கையும் அதனால் விளையும் விசித்திரங்களும்.

———:0:———

நம்முடைய அகத்துறுப்பு புறத்துறுப்பு என்னும் கருவி கரண ங்கள், இந்திரியங்கள் முதலியவற்றின் இயக்கத்துக்கு இடையூறு நேரிடுங்காலத்து நமக்குப்பிணியுண்டாவது வழக்கம். அப்படிப்ப ட்ட யாதோர் இடையூறும் நேரிடாவிடத்தும், மனோபீதியும் நம் பிக்கையின்மையுமே சிற்சில விஷயங்களில் தேகாரோக்கியத்தைக் கெடுத்துப் பிணிமுதலியவற்றை உண்டாக்கி முடிவாய்காலத்தில் மரணத்தையும் விளைவிக்கின்றனவென்று சில மனோதத்துவ சாஸ் திரிகளும் வைத்தியர்களும் அனுபவசித்தமாகக் கூறுகிற்பர். மனோ பீதியும் நம்பிக்கையின்மையும் எப்படி தேகத்தின் சுகாதாரத்தை க்கெடுக்கத்தக்கனவோ அதுபோலவே, மனோதிடமும் நம்பிக்கை யும் நாம் சுகஜீவிகளாயிருப்பதற்குப் பெருத்தகாரணமாயிருக்கின் றன. நமக்குச் சிகிச்சை செய்பவரும் வைத்தியர்கள் நம்முடைய நோயைப்போக்குவதில் பாண்டித்தியமுள்ளவரென்றும், அவர்கள்கொ

டுக்கும் ஔஷதங்களும் சொல்லும் முறைகளும் நம்மைக்குணப்படுத்தத்தக்கனவென்றும் வாஸ்தவத்தில் நம்பாத நோயாளிகளுக்கு, எவ்வளவு நன்றாய்ச் சிகிற்சை செய்தபோதினும் பிணி நீங்குவதில்லையென்று சில ஐரோப்பிய வைத்தியர்கள் வற்புறுத்திக்கூறுகிற்பர்.

ஆயுள்வேதக் கரைகண்டுணர்ந்து உலகுய்ய அளவிறந்த வைத்தியசாஸ்திரங்களை இயற்றிய தேரையர் என்னும் சித்தர் பிணியாளிக்கிருக்கவேண்டிய குணத்தை அடியில்வருமாறு கூறுகின்றனர்.

“அருப்பமுறினரசெனினுந்தீர்ப்பானைக்கண்
  டழைத்தலன்னையாதியருமவனென்றோர்தல்
விருப்பமுறத்தவிசிருத்தன்மெய்யன்பாடல்
  வேண்டிடலீந்திடவிறையேற்றுண்டலத்தைத்
திருப்பவருந்துயராற்றல்சரதங்கூறல்
  செப்புமொழிநிற்றல்பன்மருந்தொழித்தலூழா
மிருப்பகற்றுமுறைகுயிற்றலிவையுள்ளானே
  லிவனுமம்புகலுநர்க்குமின்றுநோயே.”

இதன்பொருள்:— அரசனேயானாலும் தனக்கு வியாதி நேரிட்டவிடத்து வைத்தியரை உபசரித்து அழைத்தல், அன்னை, பிதா, குரு, தெய்வம் ஆகிய இவர்கள் இந்த வைத்தியரே என்று கருதுதல், விருப்பமுண்டாகும்படி ஆசனங்கொடுத்து அவரை இருக்கச்செய்தல், உண்மையான அன்பு பாராட்டுதல், ஔஷதத்துக்காக வேண்டிய திரவியங்கொடுத்தல், அவர் கொடுக்கின்ற மருந்தை இரண்டு கைகளிலும் வாங்கியுண்ணுதல், அந்த ஔஷதத்தைப் புசிப்பதற்குத்தடையாயுள்ள வெகுட்டல் முதலியவற்றைச்சகித்துக்கொள்ளுதல், ஔஷதம் சாப்பிடுவதனால் உண்டாகும் குறைகுணங்களை உண்மையாகச் சொல்லுதல், வைத்தியர் சொற்படி அடங்கிநிற்றல், கொடுத்த ஔஷதத்தில் நம்பிக்கையற்று வேறே கண்ட கண்ட ஔஷதங்களை யுண்ணாதிருத்தல், பூர்வகர்மத்தினால் வியாதி சம்பவிக்கிற காரணத்தினாலே அதனை நிவிர்த்திசெய்துகொள்ளுவதற்குத்தானம், தருமம், நவக்கிரக சாந்தி முதலியவற்றைச்செய்தல் என்னும் இக்குணங்களைப் பிணியாளி உடையவனாயிருப்பானாகில் அவன்பெயரை உச்சரிப்பவர்களுக்கும் வியாதி அணுகாது.

இதை யோசிக்கையில் வைத்தியரிடத்தும் அவர்கொடுக்கும் ஔஷதத்திடத்தும் நம்பிக்கை வைத்து ஒழுகுதலே பிணி நீங்கு வதற்கு ஓர்வித உபாயம் என்பதைப் பூர்வீக இந்துக்கள் வெகு நன்ருய் அறிந்திருக்கிருர்கள் என்று தெரியவருகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் இங்கிலாண்டு தேசத்தில், நோயுற்றிருந்த ஒருஸ்திரீக்கு ஒருவைத்தியர்வெளிப்புறத்தே தடவுவதற்காக ஓர்விதமருந்தையும் உள்ளுக்குக்கொடுக்க ஓர்விதமருந்தையும் ஓர் கடிதத்தில் கண்டெழுதிக்கொடுத்தார். அக்கடிதத்தை அப்பெண்பால் ஔஷதசாலேக்கு எடுத்துக்கொண்டுபோய்ப் பணங்கொடுத்து அந்த ஔஷதங்களைத்தரும்படி கேட்டனள். அவ்விரண்டு ஔடதங்களும் சற்றேறக்குறைய ஒரே நிறமுள்ளவாயும் நீர்மயமானதாயும் இருந்த போதிலும்,வெளிப்புறத்தில் பூசுதற்கானமருந்தில் பாஷாணங் கலந்திருந்தபடியால் அதுவார்த்திருந்த புட்டியின் மேற்புறத்திலேபாஷாணம்ஜாக்கிரதை என்று சிவப்புக்கடிதம் எழுதி ஒட்டியும், உள்ளுக்குச்சாப்பிடுவதற்கான மற்ருெரு மருந்தைச் சாதாரணமாய் மற்ருெரு புட்டியில் வார்த்தும் அந்த ஔஷதசாலேக்கு அதிபதி அந்த ஸ்திரீயினிடத்தில் கொடுத்தனர். அப்படிக் கொடுக்கும்போது அவர்: அம்மா, "சிவப்புக் கடிதம் ஒட்டியிருக்கிற இந்தப் புட்டியில் வார்த்திருக்கும் மருந்திலே பாஷாணம் கலந்திருக்கிறது, இது வெளியில் மாத்திரம் தடவத்தக்கது, ஜாக்கிரதை, மறந்து இதை உள்ளுக்குச்சாப்பிடப்போகிருய்'' என்று எச்சரிக்கை செய்து அனுப்பினார். அவள் அவ்விரண்டு ஔஷதங்களையும் அதிக ஜாக்கிரதையாகத் தனித்தனியே தூரதூரமாய் இரண்டு மாடங்களில் வைத்திருந்து வைத்தியர் சொன்ன முறைப்படி உபயோகித்துக்கொண்டுவருகையில், அவளுடைய மைத்துனன் வேடிக்கைகாரணமாக அவளுக்குத்தெரியாமல் "பாஷாணம் ஜாக்கிரதை" என்றெழுதியிருந்த கடிதம் எந்தப்புட்டியில் ஒட்டியிருந்ததோ அதை மெல்லக்கிழித்து உள்ளுக்குச்சாப்பிடும் மருந்திருந்த மற்ருெரு புட்டியில் ஒட்டிவிட்டு ஒன்றுந்தெரியாதவன்போல் கூடிக்குலாவிக்கொண்டிருந்தான். இந்தக் காரியம் நடந்ததற்கு ஒருமணி நேரத்துக்கு முன்னமே பிணியாளி உள்ளுக்குச்சாப்பிடவேண்டிய மருந்தை உள்ளுக்குச்

சாப்பிட்டும், வெளிக்குத் தடவவேண்டிய பாஷாணம் கலந்த மருந்தை வெளிக்குப் பூசியும் வேறே வேலையாயிருந்தாள். சற்றுநேரம் பொறுத்து அகஸ்மாத்தாய் அவ்விரண்டு மாடங்களையும் பார்த்தபோது உள்ளுக்குச் சாப்பிடும் மருந்து இருக்கவேண்டிய இடத்தில் சிவப்புக்கடிதம் ஒட்டியபுட்டியிருப்பதைக் கண்டு ஓ! ஓ! எப்படியோ கைப்பிசகினால் புட்டிகள் இடம் மாறிவிட்டன, இப்போது தான் சற்று நேரத்துக்குமுன் நாம் இந்தப் பாழும் புட்டியிலிருந்த மருந்தைத்தானே சாப்பிட்டு விட்டோம், ஐயோ! ஐயோ! மோசம் வந்துவிட்டதே! என்செய்வேன்! பாஷாணம் உள்ளுக்குப்போயிற்றே! இன்றோடேமுடிந்தது என் வாழ்நாள், என்று பயபீதிகொண்டு தத்தளித்துப் பாயில் விழுந்தனள். உடனே அரைமணி நேரத்திற்குள் தொண்டையும் வயிறும் கப கப என்று எரிகிறதென்றும், மயக்கமாய்த் தலைசுற்றுகிறதென்றும் அவள் முறையிட்டனள். சற்று நேரத்திலெல்லாம் மூர்ச்சையுமாயினள். வீட்டிலிருந்த எல்லோரும் பயந்து வைத்தியரை இட்டுக்கொண்டு வந்தார்கள். அவர் அவளுடைய மூர்ச்சையைச் சற்றே தெளிவிக்க, அவள்-ஐயோ, தெரியாமல் பாஷாணம் கலந்த மருந்தை உள்ளுக்குக் கொண்டுவிட்டேன், என்று வற்புறுத்திக்கூறினள். இதைக்கேட்ட வைத்தியர் உடனே பாஷாணமுறிப்பான ஓர் மருந்தைக்கொடுத்தார். அது எவ்வளவும் அவளைக் குணப்படுத்தவில்லை. பாஷாணத்தை உட்கொண்டுவிட்டதாக அவள்கொண்டிருந்த தப்பெண்ணமும் நம்பிக்கையும் பீதியும் அவளுடைய மனதில் நன்றாய்ப்பதிந்து வேரூன்றிவிட்டபடியால் முறிமருந்து அவளை எவ்வளவும் குணப்படுத்தாமற்போயிற்று. ஆனால் பாஷாணத்தை வாஸ்தவத்தில் உட்கொண்டிருந்தால் என்னென்ன குறிகள் தோன்றுமோ அவையெல்லாம் அவளிடத்துத்தோன்றின. அடிக்கடி அவள் பிரக்ஞை தப்பியும் போகலாயினள். இவ்வளவுக்கெல்லாம் காரணனாயிருந்த மைத்துனன் பயந்து, நம்முடைய பரிஹாசம் என்ன பிரமாதமாய்விட்டதே! என்று துக்கித்து வைத்தியரிடத்தில் தான் வேடிக்கையாகச்செய்த விஷயத்தை ஒன்றும் மறைக்காமல் ஆதியோடந்தமாய்ச் சொன்னான். அவர் உடனே பிணியாளியை எழுப்பி அவளிடத்தில் அந்த விருத்தாந்தத்தை அவனைக்கொண்டு சொல்வித்ததோடுங்கூடத், தானும் பன்முறை நீ உண்

யது பாஷாணமல்ல, பயப்படவேண்டாம், என்றும் சொன்னார். என்ன சொன்னபோதினும் அவள் பாஷாணங்கலந்த மருந்தைச் சாப்பிட்டுவிட்டதாகக் கொண்டிருந்த நம்பிக்கையும் அதனால் விளைந்த மனோபீதியும் மாறவில்லை. அதன்பின் சிவப்புக்கடிதம் ஒட்டியிருந்த புட்டியைக் கொண்டுவரச்சொல்லி அவர் அதிலிருந்த மருந்தை அவள் பார்க்கும்படி தானே உள்ளுக்குச்சாப்பிட்டு, இது எவ்வளவும் பாஷாணமல்ல, இதனால் உனக்கு அபாயம் நேரிடாது, நீ பயப்படாதே என்று அன்று முழுமையும் சொல்லிக்கொண்டிருந்தார். பிறகு அவளுடைய மனோபீதியும் தப்பெண்ணமும் கொஞ்சம் கொஞ்சமாக மாறி ஒருவாறாக அவள் குணப்படுவதற்கு நாலைந்து தினமாயின.

(France) பிரான்ஸ் தேசத்தில் மரணசிட்சை விதிக்கப்பட்ட ஓர் குற்றவாளியின் விஷயமாய் மனோதத்துவ சாஸ்திர உண்மைகள் சிலவற்றைக் கண்டறிய வேண்டுமென்று பிரபல வைத்தியரொருவர் அந்தத் தேசத்துச் சக்கரவர்த்தியாரிடத்திலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்னர் அனுமதிபெற்றுக்கொண்டனர். அந்த வைத்தியர் அக்குற்றவாளியைப் பார்த்து, அப்பா நீ செய்த குற்றத்துக்காக எப்படியும் நீ இறக்கவேண்டியதுதான், ஆனால் உனக்கு எவ்வளவும் சிரமமேயில்லாமல் யான் உன்னை மரிக்கச்செய்யப்போகின்றேன், உன்னைக்கத்தியினால் வெட்டி அங்கச்சேதம் முதலியவை செய்தால் உனக்கு அதிக அவஸ்தையாயிருக்கும்; உன் தேகத்தின் ஓர் பாகத்தில் மெல்லக்கீறி அதன் மூலமாக உன் தேகத்திலுள்ள உதிரத்தையெல்லாம் யான்வெளிப்படுத்தி விடுகிறேன், அவ்வண்ணம் உதிரமெல்லாம் வெளியில் வந்துவிழ்ந்தவுடனே நீ இலேசாய்மரித்துவிடுவாய்என்று சொல்ல, அவன் - ஐயா, இதுஎனக்குப் பெருத்தசகாயமாயிருக்கும், அங்ஙனமே செய்தருள்வீராகஎன்றுமறுமொழிகூறிச் சர்வசித்தமாயின்றான். உடனே அந்தவைத்தியர் அவனுடைய இரண்டுகண்களையும் துணியினால் நன்றாய்க்கட்டிவிட்டு அவன்கழுத்தின் மேல்தோலைமாத்திரம் ஓர் ஊசியைக்கொண்டுமெல்லக்கீறினார். அதிலிருந்து வாஸ்தவத்தில் எவ்வளவும் உதிரம் கீழ்விழவேயில்லை. மேற்கண்டபடி கீறிய வாய்க்குச்சமீபமாக ஓர் கிண்ணத்தைப் பிடித்துக்கொண்டு அதில் தண்ணீரை அக்குற்றவாளி கேட்க மெல்ல வார்த்

துக்கொண்டிருக்கும்படி ஓர் ஏவலாளிக்கு அவர் கட்டளையிட்டனர். தன் கழுத்தில் கீறியதினாலேதான் அதன் மூலமாக உதிரம் அருகிரு ந்த பாத்திரத்தில் விழுந்துகொண்டிருக்கிறதென்று அக்குற்றவாளி பூரணமாய் நம்பி மனோபீதிகொள்வதற்கு இவ்வேற்பாடு அனுகூல மாயிருந்தது. அருகிலிருந்தவர்களும் வைத்தியரும் ஒன்றும் பேசாமல் இடை இடையே இருந்து இருந்து "ஐயோ! ஐயோ!" என்றும், "இன்னும் சற்றுநேரந்தான்." என்றும், "முடிவாய்விட்டது." என்றும் பரிதாபம் தோன்றச் சொல்லிக்கொண்டேவந்தார்கள். இத்தப்படி ஐந்து ஆறு நிமிஷம் சென்றபின்பு கழுத்துக்குச் சமீபமாய்ப் பிடித்துக்கொண்டிருந்த பாத்திரத்தில் தண்ணீர் வார்த்துக்கொண்டிருப்பதை மெல்ல நிறுத்திச் சொட்டு சொட்டு என்று துளித்துளியாகத் தண்ணீர் விடும்படி வைத்தியர் சைகை செய்தனர். பிறகு அதையும் நிறுத்தி விடும்படி குறிப்பித்தனர். இவ்வாறு சப்தம் முற்றும் நின்றுபோய்விட்டவுடனே தன் உதிரமெல்லாம் வெளியே வந்துவிட்டது, இனி ஒருதுளியும் தேகத்தில் இல்லை என்று பூரணமாய் நம்பி மதிமோசம்போன அக்குற்றவாளி கீழே விழுந்து இறந்தான். வாஸ்தவத்தில் ஒரு துளி உதிரமும் விரயமாகாதிருந்தும் அந்த வைத்தியர் செய்த தந்திரத்தினால் பூரண நம்பிக்கைகொண்டு மனோபீதியடைந்து அதுகாரணமாகவே அக்குற்றவாளி மரித்தது என்ன விசித்திரம்!

மனோபீதியினாலும் நம்பிக்கையினாலும் விளையத்தக்க விசித்திரங்களை அறிய ஐரோப்பாவில் மற்றொருதேசத்திலே நாலைந்து கனவான்கள் அவரக்கொண்டு நல்ல தேகாரோக்கிய ஸ்திதியிலிருந்த ஒருவனைப்பார்த்து, அப்பா, ஐயையோ! நீ என்ன அதிகமாய்த் தேகம் மெலிந்துபோயிருக்கிறாய்? என்று ஒரு கட்டுப்பாடாய் அடிக்கடி சொல்லிக்கொண்டே வந்தார்கள். இவர்கள் இந்தப்படி கூறிக்கொண்டு வருந்தோறும் தேகாரோக்கிய ஸ்திதியிலிருந்த அவன் நாளடைவிலே பற்பல வியாதிகளினால் மெலிந்து திகிலடைந்து இறுதியில் இறந்தும் போனான்.

சில ஆண்டுகளுக்கு முன்பு திரிசிரபுரத்தை அடுத்த ஒரு கிராமத்தில் இவ்விஷயமான விந்தை ஒன்று நடந்தது. அந்த கிராம

த்துக்கு அரைமைல் தூரத்திலுள்ள காட்டில் இருந்த ஓர் ஆலமரத்தில் ஓர் பூதம் இருந்ததாக அந்த கிராமத்தவர் யாவரும் நெடுநாளாய் நினைத்துவந்தார்கள். ஆகையால் அக்காட்டின்வழியாகத் தனியே அவ்வூரார் எவரும் போவதில்லை. இப்படியிருக்கையில், வெளியூரிலிருந்து அவ்வூரில் தங்கவந்த ஒருவன் அந்தச் செய்தியைக்கேட்டு அவ்வூரானைப்பார்த்து, இதுஎன்ன விபரீதம்? பூதம் என்கிற பதார்த்தம் ஒன்று இருப்பதாக எனக்கு எவ்வளவும் நம்பிக்கையில்லை, நீங்கள் யாராவது எப்போதாகிலும் அந்தப் பூதத்தைக்கண்டீர்களா? நீங்கள் சொல்வதெல்லாம் பொய்என்று மகாதைரியசாலிபோல் பரிஹாசம்செய்தான். அதைக்கேட்ட அக்கிராமத்தவர்கள்-அப்படியானால், நீ தனியே அங்குச்சென்று அவ்விருட்சத்தின் மீதேறி அதில் ஓர் ஆணியை அடித்துவிட்டு இறங்கிவருவாயாகில் உனக்கு ஆயிரம் ரூபா பரிசு அளிக்கின்றோமென்றார்கள். அவன் அதற்குச் சம்மதித்து ஓர் ஆணியையும் சுத்தியையும் எடுத்துக்கொண்டு மகா வீராவேசத்துடன் அக்காட்டுக்குத் தனியே சென்றான். அந்தப்படி செல்லுகையில் பூதமென்பது ஒன்று இல்லையென்றுவாசாகைங்கரியமாய் அக்கிராமத்தாருக்கு அவன் முன்னே சொல்லிவிட்டபோதிலும், நெடுநாளைய பழக்க முதலியவற்றினால் உள்ளே பயம் மாத்திரம் அவனை விட்டகன்றிலது. ஆயினும் அங்கே சொன்னபடி சாதிக்கவேண்டுமென்கிற மானம் ஓர்புறம் தூண்ட அவ்விருட்சத்தின் மீதேறி மேலும் கீழும் நாற்புறமும் சுற்றிச் சுற்றிப்பார்த்துக்கொண்டே அதிவிரைவாய் ஒரு கிளையில் ஆணியை அடித்தான். அப்படி அவசரமாயடிக்கையில் அவன் போட்டுக்கொண்டிருக்கிற கம்பளிச் சொக்காயின் கைமுன்தொங்கல் தளர்ச்சியாய்ச் சற்று நீண்டிருந்தபடியினாலும் அவன் பீதியினால் நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தபடியினாலும் தெரியாமல் அவசரத்திலே அச்சொக்காயின் கைமுன்தொங்கல் பாகத்தையும் சேர்த்து மரத்தில் ஆணியை நன்றாய் அடித்துவிட்டான். பிறகு கீழே இறங்கும்போது சொக்காயின் அந்தப்பாகம் மேலே இழுத்தமையால், ஓ! ஓ! பூதந்தானிருந்து மேலே இழுக்கிறதென்று பயந்து இறந்து அப்படியே கிளையில் தொங்கிக்கொண்டிருந்தான். நெடுநேரமாகியும் போனவன் மீளாதபடியால் சந்தேகித்து அக்கிராமத்தார் எல்லாம் ஒன்றுகூடி

அவ்விருட்சத்தண்டைபோய்நடந்த விருத்தாந்தத்தை ஊகித்தறிந்து துக்கித்தார்கள்.

ஆகையால்பயங்கரத்தை விளைக்கத்தக்க யாதொரு வதந்தியுண்டாயிருக்கும் இடத்தில் எவ்வளவு தைரிய புருஷனாயிருந்தாலும் திடீரென்று அவசரப்பட்டுப்போவது சரியன்று. தற்காலத்தில் பூதம்-பேய் - பிசாசு என்பவற்றில் ஒருவனுக்கு நம்பிக்கையிராவிடினும் பாலியந்தொட்டு அத்தகையநம்பிக்கையுள்ளவர்களுடன் தான்கூட்டுறவு கொண்டிருந்த தோஷத்தினால் மனம் ஒவ்வோர் காலத்துச் சலனப்பட்டுப் பீதியடைதல்கூடும். மனோதிடம் பூரணமாயிருந்தாலன்றி அப்படிப்பட்ட இடங்களுக்கு அவற்றைக் குறித்துண்டாயிருக்கும் வதந்தியை அலட்சியஞ்செய்து போதல் அபாயத்துக்கிடமாகும்.

பிணியாளிகள் கேட்டு அதைரியப்படும்படி வைத்தியர்களாவது உறவினர் - நண்பர்கள் முதலியவர்களாவது வார்த்தையாடுதல் கூடாது. பிணியாளிகளை எவ்வகையாலும் உற்சாகப்படுத்திக்கொண்டே வரவேண்டும். மூளையைப்பற்றி வியாதிகண்டு பிசாசு பிடித்திருக்கிறதென்று சொல்லப்படுகிற பிணியாளிகளுக்கு இந்துக்கள் செய்து வரும் பற்பல சிகிச்சைகளும் ஏனைய வியாதியஸ்தர்களுக்குச் செய்து வரும் திருஷ்டிகழித்தல் முதலாகிய பரிகாரங்களும் அவர்கள் அனுஷ்டித்துவரும் மற்றும் அளவிறந்த வழக்கங்களும் யோசித்துப் பார்க்குமிடத்துச் சாஸ்திர யுக்தமாகவே யிருக்கின்றன. பெரும்பாலும் அவைகளெல்லாம் பிணியாளிகளின் மனோபீதியை யகற்றி அவர்களுக்கு மன அமைதி உண்டாக்கி அவர்களுடைய பிணிகளைப் போக்கி அவர்களைக் குணப்படுத்துவதற்கேற்றவைகளாகவே யிருக்கின்றன. அவற்றை விரிக்கிற் பெருகும்.

"ஜனவிநோதினி"

———

சாந்துப்புலவர் வரலாறு.

(முற்றொடர்ச்சி.)

ரகுநாத சேதுபதிகளாற் பெற்றமானிய மகமைகளுக்கும் அவர்கள் வழிவந்த சேதுபதிகளாற் கொடுக்கப்பட்ட மானியமகமைகட்கும் யாதொரு பட்டயமும் கிடையாவிடினும் ரகுநாத சேதுபதிகள் சகோதரன் முத்துவைரவநாத தேவரவர்கள் கொடுத்த கோடகுடி கொந்தலான் வயல் என்னுங் கிராமங்களின் சர்வமானியப் பட்டயத்தால் ஆதி நெட்டிமாலைச் சர்க்கரைப்புலவர் கடைசியாயிருந்த காலம் இன்னதென்று துணியப்படுகின்றது. அப்பட்டயமாவது:—

கோடகுடி கொந்தலான் வயல், சர்வமானிய டட்டயப்பிரதி.

ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹந ஸகாப்தம் ௧௬௭௩ இதன்மேற் செல்லாநின்ற கரநாம ஸம்வற்சரத்தில் வருஷருதுவில் கார்த்திகை மாசத்தில் சோமவாரமும் புனர்பூச நக்ஷத்திரமும் ஷிஐநாஜ யோகமும் பாலவாகரணமும் கூடின சுபதினத்தில் தேவை நகராதிபன் ராமநாத சுவாமிகாரிய துரந்தரன், சிவபூஜா துரந்தரன், பரராஜசேகரன் பரராசதேச சிங்கம், இரவிகுலசேகரன், சொரிமுத்து வன்னியன், அரியராயிரதளவிபாடன். வாக்குத்தப்பு வராக்கண்டன் பட்டமானங்காத்தான். தட்டராயிரகண்டன். புவனேகவீரன். வீரகஞ்சுகன், வீரவளநாடன். வீரமார்த்தாண்டன். பரத வித்தியாதான இயல் வித்தியாதான பரதளவி பாடன் அரிகொலரக்ஷதன அத்தம பாகண்டன சாடிக்காரன் கண்டன் சாமித்துரோகிகள் மிண்டன் (ஸ்ரீமலிங்கம் துணை) பஞ்சவன்ன ராகுத்தன். பறுக்குவராக் கண்டன் யாளிநாராயணன் இவுளி பாவடி நெட்டபடக்கிவை. மிரித் தேறுவார் கண்டன். இளஞ்சிங்கம் தளசிங்கம் பகை மன்னர் சிங்கம் துரைராயன் ஆற்றிற்பாச்சி கடலிற் பாச்சி மதப்புலி வணங்காப்புலி வன்னியராட்டந் தவிழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்கு மிருதாளினன் வீரகெம்பீரன் தொண்டித்துறை காவலன் துரகரேவேந்தன் அநுமகேதனன் கொடைக்குக் கர்னன் பரிக்கு நகுலன் குன்றனைய மேருவிற் குன்றுவனை குணில்

பொறித்தவன் திலகநுதன்மடமாதர் மடலெழுதவரு சுமுகன் விசய
லக்ஷ்மி காந்தன் சகலகலை விற்பன்னன் காமினி கந்தர்ப்பன் அட்ட
திக்குமனோபயங்கர துட்ட நிக்கிரகசிட்ட பரிபாலன் வீரதண்டை
சேமத்தலை விளங்கு மிருதாளினன் சேதுகாவலன் வாபாதிபனு
ன தகவூர்க்கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர்
கீழ்பால் விரையாதகண்டன் ஹிரண்யமதவாவி ரெகுநாததேவர்
மருமகன் செம்பிநாட்டில் திருவுத்தரகோச மங்கையிலிருக்கும் கடம்
பதேவர் புத்திரன்.—விசயரகுநாதச்சேதுபதி சகோதரரான முத்து
வயிரவ நாததேவரவர்கள் கிடாரத்திலிருக்கும் சாந்தாபிள்ளை புத்தி
ரன் ராமாயணப் பிரசங்கம் சர்க்கரைப் புலவருக்கு ராமசாமி சன்ன
தியில் வேதபாரகரும் இயலிசை நாடகத்தமிழ் வித்தியாதாருங்
கூடிய சபையில் ராமாயணப் பிரசங்கத்துக்குப் பரிசாய் இராமசாமி
பட்டாபிஷேகத்தில் கட்டளையிட்ட கிராமமாவது:—வெள்ளாம்பத்தி
ல்சாத்தனி வயலுக்கும்எம்பல்குளத்துக் காலுக்குந்தெற்கு. மஞ்சக்
குடிப் புரவாகிய வலையன்வயலுக்கும் கீழ்க் காவனூருக்குங் விதத்
தூருக்கு மேற்படியூர்ப்புரவாகிய பொத்தையன்வயலுக்கும்வடக்கு.
ஆசான் வயலுக்கும் ஏம்பல் குளத்துக்கும் மேற்கு. ஆக இந்த நான்
கெல்லைக்குட்பட்ட கோடகுடி கொந்தாலம்வயல் நஞ்சை புஞ்சை
மாவடை மரவடை திட்டுத்திடல் மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய
கிணறும் நீரும்பாசி முதலாகிய குடி, படை, பள்ளுப்பறை, இறை,
வரி ஊழியம் உலுப்பை சகல சமுதாய சலதரு பாஷாண அக்ஷீவா
வ ஏஜய்வஸித மென்று சொல்லப்பட்ட அஷ்ட போகதேச ஹா
சியங்களும் தானவிக்கரயங்களுக்கு யோக்கியமாக சந்திராக்க
ச் சந்ததிப்பிரவேசம் புத்திர பௌத்திர பாரம்பரையாக சரு
வமானியமாக வாண்டனுபவித்துக் கொள்ளவும். இந்தக்கிராமத்
துக்கு யாதாமொருவர் பரிபாலனம்பண்ணினபேர்கள் காசியிலேயும்
மற்றைப் புண்ணியஸ்தலங்களிலேயும் பெரியோர்கள் சந்நிதானங்
களிலேயும் ராமசுவாமி சரித்திரங்களாகிய இராமாயணத்தைக் கேள்
வியானவர்கள் எந்தப்பலத்தை யடைவார்களோ அந்தப்பலத்தை
யடைவாராகவும். இந்தக் கிராமத்துக்கு அஹிதம் பண்ணினவர்
கள் ராமசுவாமி சரித்திரத்தை யசத்தியமாக நினைத்தவர்கள் போகி

ன்ற தோஷத்திலேயும், கங்கைக்கரையிலேயும் தனுக்கோடிக்கரையிலேயும் ராமபக்தரையும் சிவபக்தரையும் மாதாபிதாவையும் குருவையும் காராம்பசுவையும் இம்சைபண்ணின தோஷத்திலேயும் அடைவாராகவும்."

இறுவாம்பிவிராம வென்றேரும்பர்
கிறுவரென்பது நிச்சயமாதலான்
மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்
பெறுவரென்பது பேசவும் வேண்டுமோ.

என்பதாம்.

இது கி பி - 1711ல் கொடுக்கப்பட்டிருப்பதால் சர்க்கரைப்புலவர் ரகுநாத சேதுபதிகளுக்குப் பின்னும் 41 வருடம்வரையிலும் இருந்ததாகத் தெரிகிறது.

இவரது ஆசிரியராகிய சிவக்கொழுந்து தேசிகர் கி பி - 1658ல் இருந்ததாகக் கருதப்படுவதால் அவரிடம் கல்விகற்று முற்றிய பின் ரகுநாத சேதுபதிகளின் ஆட்சியின் பிற்பகுதியிலேதான் இவர் சமஸ்தானவித்துவானாக வந்திருக்க வேண்டும். அங்ஙனம் சமஸ்தான வித்துவான் ஆனகாலத்தில் இவருக்கு வயது 25 வைத்துக்கொண்டாலும், இந்தப்பட்டயம் பெறும்பொழுது 75 வயதுக்குக்குறையா திருந்திருக்க வேண்டு மென்றே தோற்றுகிறது. இவ்வளவு வயதில் ராமாயணப் பிரசங்கஞ்செய்து இத்தகைய நன்கொடை பெற்றாரென்பது இக்காலத்தவர்க்குப் புதுமையாக் காணப்படினும் தற்போதிருக்கும் முற்காலத்திய முதியவருடைய தேகபலத்தை நோக்கும்பொழுது அக்காலத்துத் தொண்ணூறு வயது வரையிலும் இருந்ததாக அறியப்படுகிற இவர் திடசரீரியாக இருந்திருக்கக் கூடு மென்றே தோன்றுகிறது.

செட்டிமாலைச் சர்க்கரைப்புலவர் தொண்ணூறுவயது வரையிலு மிருந்தாரென்பது 100 வயது வரையிலு மிருந்த அவர் மனைவியாலறியப்பட்ட கர்ணபரம்பரைச்செய்தியாகும். இது சேதுபதிகள் சர்வமானியமாக வளித்த உழக்குடிக் கிராமத்தின் குளக்கால் சம்பந்தமாக ஏற்பட்ட மனத்தாங்கலால் அயற் கிராமத்தார்கள் புலவர் வீட்டைக் கொள்ளையடிக்கக் கருதியிருந்ததையறிந்த ஆதி

சர்க்கரைப்புலவருடைய பௌத்திரர்கள் வீட்டிலுள்ள பண்டங்களையெல்லாம் வீட்டுப்புறத்திலுள்ள கொல்லையிலே புதைத்து விட்டுத் தமது பாட்டியாகிய கிழவியை வீட்டிலிருத்தி அயல் ஊருக்குப் போய்விட்டார்களென்றும், அச்சமயத்தில் கொள்ளையடிக்கக் கருதியவர் வந்து வீட்டில் யாதொன்றுங் காணப்பெறுமையால்கவற்சிகொண்ட அவர்களுடன் ஒருவன் "வெறுங்கையை வீசிக்கொண்டு போகிறதா. இதோ அடுக்கியிருக்கும் ஏடுகளிலாவது ஆளுக்கொன்றை எடுங்கள்" என்று சொன்னதைக் கேட்டிருந்த கிழவி, எந்தப் பொருள் போனாலும் நம்பிள்ளைகள் தேடிக்கொள்வார்கள்: அந்தப் பொருளைத் தேடிக்கொள்வதற்கு ஏது வாயிருக்கும் இந்த ஏடுகள் போய்விட்டால் யாது செய்வார்கள்; நம்வீட்டில் பலபேர்கள் வந்து ஏடுகள் எழுதிக்கொண்ட காலம்போக நம்பிள்ளைகள் அயலார் வீட்டுத்திண்ணையில் போயிருந்து எழுதிக் கொள்ளவிரும்பினும் கிடைக்கக் கூடியதில்லையே யென்றெண்ணி, ஏடுகளையெடுக்க முயன்றவர்களைக் கூப்பிட்டு வீட்டிலிருந்த பண்டங்களைப்புதைத்து வைத்திருக்குமிடத்தைச் சொல்லிவிட்டாளென்றும், அப்போது ஒருவன் கையில் ஓர் ஏட்டை எடுத்துக்கொண்டுபோக விரும்பியதைக்கண்டு அவ்வேட்டைத் திருகிப்பறித்துக் கொண்டாளென்றும், அவ்வேடுதான் இப்பொழுது எங்கள் வீட்டிலிருக்குங் கம்பராமாயணமென்றும் இப்பொழுது எங்கள் வீடுகளிலிருக்கும் முதியவர்களால் விளங்குகிறது.

இஃது இங்ஙனமாக 147 வருடங்கட்குமுன் கி.பி 1761ல் சர்க்கரைப்புலவர் மிழலைச்சதகம்பாடி அரங்கேற்றியதற்கு, மிழலைக்கூற்றத்து வேளாண்குலத்தவர்களால் அவர் குமாரராகிய முத்துமுருகப்புலவருக்கு மகமைப்பட்டயமொன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பட்டயமாவது ஸ்வஸ்தி ஸ்ரீ ஸாலிவாஹநஸகாப்தம் ௧௬௮௩ க்கு கலியுகாப்தம் ௪௮௬௨ க்கு இதின்மேற் செல்லாநின்ற விக்கிரம வருஷம் மாசிமீ ௨௰௨ திருமிழலை நாட்டுப்பிள்ளைமார் சர்க்கரைப்புலவர் குமாரர்முத்துமுருகப்புலவருக்கு மகமைப்பட்டயம் பண்ணிக்கொடுத்தபடி. மிழலைநாட்டுச்சதகம்பாடி நாட்டுப்பிள்ளைமார் பேரில் அரங்கேற்றினதற்கு செங்காலப்பிள்ளை நாட்டுப்பிள்ளைமார் உள்ளிட்டாரும் ஆத்மசந்தோஷமாக மரத்தால் குழுணிவிதம் மகமை பண்ணிக்கொடுத்தோம்.

வெள்ளாம்பத்தில் .... பண்டாரவாடைக் கிராமம் சருவமானியக் கிராமம் அர்த்தமானியக்கிராமம் சுரோத்திரியக் கிராமம் கோவில்கிராமம் இந்தக்கிராமத்துக்கெல்லாம் மாத்தால் குருணிவீதம் மகமை என்றென்றைக்கும் கொடுத்து நடப்பிவிப் போயாகவும். இந்தப்படிக்கு பொன்பேத்தி செங்கால சீரங்கபிள்ளை வீரப்பெருமாள்பிள்ளை திராவினை தீர்த்தபிள்ளை திருவபிள்ளை திய்யத்தூர்ப் பெருமாள்பிள்ளை குளத்தூர்ச் சீரங்கபிள்ளை களபம் வீரப்பெருமாள்பிள்ளை ஆவணம் வெழுவுப்பிள்ளை பெரியணபிள்ளை அமரடக்கி வீரபெருமாள்பிள்ளை கோலேந்திரம் சின்னபிள்ளை வேங்கப்பிள்ளை தாளனூர் கொண்டாபிள்ளை அடைக்கலங்காத்தபிள்ளை பாகம் மணவாளபிள்ளை மீன்பூசல் செய்யானம் குஞ்சுப்பிள்ளை மணவாளபிள்ளை வீரப்பெருமாள்பிள்ளை வெட்டையளம் மணிகட்டியா வீரப்பெருமாள்பிள்ளை விளத்தூர் உலகபிள்ளை கார்க்கபலம் மணவாளபிள்ளை பாண்டியாபிள்ளை ஆவணபிள்ளை .... ருமபிள்ளை நெய்வேலி வீரப்பெருமாள்பிள்ளை வெள்ளூர் அழகபிள்ளை மீட்டாபிள்ளை சிறுவரை மரக்கபிள்ளை பூவலூர் வீரப்பெருமாள்பிள்ளை சாத்தடி கொண்டாபிள்ளை வேட்டனூர் .... பிள்ளை கொடிக்குளம் மலையப்பிள்ளை வேங்கிடபிள்ளை பெரியணபிள்ளை, வீரப்பெருமாள்பிள்ளை ஆவுடையார் கோவிலம்பலத்தாடுதம்பிரான் அவர்கள் சாமியப்பநம்பியார் சிலம்பாத்தான்சேருவைகாரர் வெட்சியூர் மெய்யப்பன் சேருவைகாரர் ஒக்கூர் சின்னம்பலகாரன் சட்டயனம்பலகாரன் பொதுவக்கூர் சேருவைகாரன் ஆலத்தூர் .... பொய்யனூர் அளகபிள்ளை இவர்கள் சொற்படிக்கு வெள்ளூர் மகாணம் நாட்டுக்கணக்கு குப்பையன் கையெட்டெழுத்து இந்தப்படிக்கு சந்திராதித்திய........................ .... கொண்டு சுகமேயிருக்கக்கட வீராகவும். இந்தப்படிக்கி செங்காலபிள்ளை” என்பதாம்.

இந்த மிழலைச்சதகம் சர்க்கரைப்புலவரே பாடின தென்பது
தருதஞ்சைவாழும்பிரதாபசிங்கேந்த்ரதருமன் மெச்சும்
வருமணிமாமுத்திரைவேங்கிடாசல மாச்சம்பிரதி
நாதுங்கபாலகமாணிக்கவேள்சுப நாளையிலே
உரைசெய்மிழலைச் சதகத்தைச் சர்க்கரையோதினனே.

என்பதாலும் தெரிகிறது. தஞ்சை பிரதாபசிங்கு மகாராஜா கி. பி. 1765 முதல் 1778 வரையில் இருந்ததாகத்தெரிவதால் மேற்கண்ட மகமைப்பட்டயத்திற் குறித்த காலத்திற்கொத்ததேயாகும்; அன்றியும் கி பி. 1711ல் சர்வமானியப்பட்டயம் பெற்ற சர்க்கரைப்புலவருக்கு அக்காலத்திலேயே 75 வயது இருக்குமென்று கருதப்பட்டமையால் அவரேபின்னும் 50 வருடங்கழித்து மிழலைச்சதகம்பாடியரங்கேற்றினரென்பதுகூடாமையால் மிழலைச்சதகம்பாடிய சர்க்கரைப்புலவர் பின்னிருந்த சர்க்கரைப்புலவர் என்றும் இவரே சாந்துப்புலவருக்குத்தந்தையாரென்றும் விளங்குகின்றது.

இது 1801ல் மருதுபாண்டியன் பகைவரால் பிடிக்கப்பட்டதையறிந்து துக்கசாகரத்தில் மூழ்கினவராய் சிறுகம்பையூருக்குப் போனவுடன் சிவபதமடைந்த சாந்துப்புலவருக்குப்பின்னும் அவர் தகப்பனர் சர்க்கரைப்புலவர் இருந்தார் என்று அறியப்படுவதற்கும் ஒத்ததாகவிருக்கிறது. இந்தப்பட்டயம் முத்துமுருகப்புலவர் பேராவிருப்பதைக்கருதும்போதும் சர்க்கரைப்புலவர் தாமே தம்பிள்ளைகட்குப்பாகம் ஒதுக்கிக்கொடுத்துவிட்டு இளையாள் குமாரராகியமுத்துமுருகப்புலவரிடத்தில் கோடகுடியில் இருந்தகாலத்தே மிழலைச்சதகம்பாடிப் பட்டயத்தைத்தன் இளைய மனைவி பிள்ளைபேருக்குச்செய்வித்திருக்கலாகுமென்று விளங்குகிறதுடன் சாந்துப்புலவர் சகோதரர்களாகிய சீனிச்சர்க்கரைப்புலவர் சீனிப்புலவர் முத்துமுருகப்புலவர் முதலியோரேயன்றி இவர்கட்குமுன்னும் சீனிச்சர்க்கரைப்புலவர் சீனிப்புலவர் முதலியோர் இருந்ததாக அறியப்படுவதால் அவர்களே ஆதிநெட்டிமாலைச்சர்க்கரைப்புலவர் குமாரர்களென்றும் அவர்களுள் சீனிச்சர்க்கரைப்புலவர் குமாரரே மிழலைச்சதகம்பாடிய சர்க்கரைப்புலவரென்றும் அந்தச்சீனிப்புலவரே திருவாவடுதுறையில் பன்னிரண்டாவது பட்டத்திலெழுந்தருளியிருந்த திருச்சிற்றம்பலதேசிகரிடத்து ஞானோபதேசம்பெற்று திருத்துறைசைக்கலம்பகம்பாடியவரென்றுங்கருதப்படுகிறது. இதுமயூரகிரிக்கோவை 510ம் பாடலின் கீழ்க்கண்ட குறிப்புரைக்கும் ஒத்ததாகும். இத்துணையுங்கூறியவாற்றால் இந்நூலாசிரியராகிய சாந்துப்புலவருக்குத் தகப்பனாராகிய சர்க்கரைப்புலவரேயன்றி மூன்றும் பாட்டனாராகிய

சர்க்கரைப்புலவரும் ஒருவரிருந்தாரென்பதும் ரெகுநாத சேதுபதி முதல் அவர்கள் வழிவந்தசேதுபதிகளும் ஆதி சர்க்கரைப்புலவர்முதல் அவர்கள் வழிவந்தபுலவர்களை ஆதரித்துவந்தார்கள் என்பதும் இப்புலவர் மரபில் முன்னும் பின்னும் பல பெரும்புலவர்கள் தோன்றி இருந்தவர்களென்பதும் சேதுபதிகளுக்குக் குருபீடமாய் விளங்குந்திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனமே அச்சேதுசம்ஸ்தான வித்வானாகிய ஆதிசர்க்கரைப்புலவர் காலமுதல் அவர் வழித்தோன்றிய பெரும்புலவர்களாயிருந்த சீனிப்புலவர் சீனிச்சர்க்கரைப்புலவர் முதலானவர்கட்கும் அடியேனுக்கும் அன்னமுமாடையும் அருந்தமிழ்க்கல்வியுஞ் சொன்னமும் அளித்து அருள்புரிந்து வருகின்றதென்பது நன்குணரலாகும்.

இந்த நெட்டிமாலைச் சர்க்கரைப்புலவர் ஆதியில் சிறுகம்பையூரில் இருந்தாராயினும் இவர் மரபிலுள்ள புலவர்களிப்பொழுது சிறுகம்பையூரிலும் ஓரியூரிலும் கோடகுடியிலும் பண்டைக்காலத்துச் சேதுபதிகளாற் கொடுக்கப்பெற்ற மானியம் மகமைகளையே சீவனதாரமாகத் துய்த்துச் சுகித்திருக்கின்றனர்.

சேரசோழ பாண்டியரென்னும் வேந்தர்களுக்குப்பின் செந்தமிழ்ப்பா வேந்தர்களை யாதரித்துவரும் இத்தகையவள்ளன்மையுடைய சேதுபதிகள் திருமரபு நீடூழிவாழ்க.

இந்நூலாசிரியராகிய சாந்துப் புலவருக்குப் பிதாவாகிய சர்க்கரைப் புலவரேயன்றி இவருக்கு மூன்றும் பாட்டனாராகிய சர்க்கரைப்புலவரும் ஒருவருண்டென்பதை யறிவிக்கு நிமித்தமாக இவர் முன்னோர் வரலாறுஞ் சுருங்கக்கூற வேண்டுவதின்றியமையாதிருந்தமையானும் ஆதி சர்க்கரைப்புலவரைத், தவிர அவர் வழிவந்த மற்றப்புலவருடைய பெயர்களையுந் தமிழுலகம் அறியாமலிருந்தமையானும் அவற்றைத் தொகுத்து இவ்வரலாற்றுடன் ஒருவாறு எழுதினேன். இதிற் குறித்துள்ள காலஅளவு முதலியவற்றில் ஏதேனுந் தவறுகளிருக்கவுங் கூடுமாதலால் கல்வியறிவுள்ள பெரியோர் அவற்றை எனக்குத் தெரிவிப்பார்களாயின் அவர்கள் பால் எப்பொழுதும் நன்றி பாராட்டவும் கடமைப்பட்டுளேன்.

கோடகுடி. சே. சர்க்கரை-இராமசாமிப்புலவன்.

*

உ

நல்லொழுக்கம்.

———:o:———

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்ப்பு.]

(முற்றொடர்ச்சி.)

இதுபோன்றில்லாத வேறு காரியத்தில், லாப்பிளேஸ் (Laplace) என்பவர் இத்தகைய வீரத்தன்மையை வாலிபனான தத்வ சாஸ்திரியாகிய, பயட் (Biot) விஷயமாய்ப் புலப்படுத்தியதுண்டு; அஃது என்னையோவெனின், அந்த வாலிப சாஸ்திரி பிரான்சு கல்விச்சாலையில் ஓர் உபந்நியாசத்தை வாசித்தபொழுது, அங்கே கூடியிருந்த வித்வான்கள், கடைசியில் அந்த உபந்நியாசமானது சுவயம்பென்றுசொல்லி அவரைப்புகழ்ந்து கொண்டாடினர். மான்ஜ் (Monge) க்குத் தன்காரியசித்தியில் மகிழ்ச்சி உண்டாயிற்று. லாப்பிளேஸ் (Laplace) உம், பயட் (Biot) உடைய தீர்மான வாக்கியங்களின் தெளிவினுக்காக அவரைப் புகழ்ந்து கொண்டாடி, அவரைத் தம் வீட்டிற்குத் தம்முடன் கூட்டிக்கொண்டு போயினர். அங்கே வரவே, லாப்பிளேஸ் (Laplace) என்பவர் தம் படிப்பு அறைக்குப் போய், ஓர் இடத்திலிருந்து நாட்பட்டு மஞ்சள் நிறங்கொண்டிருந்த ஓர் காகிதத்தை எடுத்து அந்த வாலிப சாஸ்திரியிடம் கொடுத்தனர். அதிலே தான் இப்பொழுது புகழ்ச்சிபெற்றிருந்த சகல கணக்குகளும் தீர்ந்திருப்பதைக் காணவே, பயட் (Biot) என்பவருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. லாப்பிளேஸ் (Laplace) என்பவர், பயட் (Biot)என்பவருக்குக்கல்விச்சாலையிற் புகழ்நிலைபெறுகிறவரை இந்த விஷயம் அவருக்குத்தெரிந்ததாகவே, வேண்டாமென்று அருமையான பெருந்தன்மையுடன் சொல்லி அவரையும் வெளியிடாவாறு கற்பித்தனர். ஐம்பது வருஷத்திற்குப்பின்னர், பயட் (Biot) என்பவர், தாமே வெளியிட்டிராவிடில், இந்தச்சங்கதி இதுவரை இரகசியமாகவேயிருந்திருக்கும்.

தன்னயம் பாராட்டாமையாகிய இதேகுணமானது, வேறுரூபமான சங்கதியில் ஒருபிரான்சுத் தொழிலாளியிடம், காணப்பட்டதா

கச் சொல்லப்படுகிறது. பேரிஸ் (Paris) நகரத்திற் கட்டப்பெற்றுக் கொண்டிருந்த ஓர் உன்னதமான வீட்டின் முகப்பிலுள்ள சாரத்தில் மனிதர்கள் சாமான்களுடன் ஏறியிருந்தனர். அந்தச்சாரமானது பல ஹீனப்பட்டிருந்ததால், முறிந்துவிட்டது. இரண்டுபேரைத்தவிர அதிலிருந்த மனிதர்கள் தரையில் விழுந்துவிட்டனர். வாலிபராயும், நடுத்தரவயதுடையராகவு மிருந்த அவ்விருவரும், ஓர் ஒடுங்கியபலகைத்தட்டில்தொங்கினர்கள். அது அவர்களுடைய பாரத்தைத்தாங்கமாட்டாமல், தீர்மானமாக முறிந்துவிடும்படியான ஸ்திதியில் இருந்தது. இரண்டுபேரில் மூத்தவன் மற்றவனைப்பார்த்து பயர்ரி (Pierre) ஏ, நீ போய்விடு,நான் ஓர் குடும்பத்திற்குத் தந்தையாயிருக்கிறேன்." என்று கூவினன். அதற்கு பயர்ரி (Pierre) என்பவன் என்று சொல்லி உடனே தன்கைப்பிடியை விட்டுவிட்டுக்கீழே விழுந்து அதே இடத்திற் கொல்லப்பட்டான். குடும்பத்திற்குத் தந்தையானவன் ரக்ஷிக்கப்பட்டான்.

தைரியமுள்ளவன், பெருந்தன்மையும்,சாந்தமுமுடையவனுயிருக்கிறான். அவன் தன் சத்துருவையுங்கூட அசந்தர்ப்பமான காலத்திற் பிடிக்கிறதில்லை. ஒருமனிதன் தன்னைக் காத்துக்கொள்ளக்கூடா மற் கீழே கிடக்கும்பொழுது அவனை அடிக்கிறதில்லை. மரணம் விளைக்கத்தக்க யுத்தமத்தியிலும் கூடத் தயாளம்பற்றியதிருஷ்டாந்தங்கள் சாதாரணமாய்க் காணப்படுகின்றன. இவ்வாறு டிட்டின்ஜன் (Dettingen) யுத்தத்திற் சண்டையின்மும்முரமான வேளையில் பிரான்சுக்காரரின் சேனைக்கூட்டமானது இங்கிலீஷ்சேனைமீது தாக்கிற்று. ஆனல் அவர்களை நடத்தியவராகிய வாலிபரான பிரான்சு; தளகர்த்தன் இங்கிலீஷ்தலைவனைத்தாக்கும் தருணத்தில்அவனுடைய குதிரைக்கடிவாளத்தை யிழுத்துக்கொண்டிருந்த ஒருகைமாத்திரம், அவனுக்கு உண்டென்று அறிந்தபொழுது அந்தப்பிரான்சுக்காரன் தன் கத்தியால் சுமுகத்தோடு அவனுக்கு வந்தனம்செய்துவிட்டுப் போய்விட்டான்.

இராஜ சேனையானது விட்டன்பர்க் (Wittenburg) ஐ முற்றுகையிட்டுப்பிடித்த பிற்பாடு, ஐந்தாவது, சார்லஸ் (Charles. V) ஆகிய அரசன் லூதர் (Luther) உடைய கல்லறையைப் பார்க்கப் போனர். அதன்பேரில் எழுதியிருந்த எழுத்துக்களை வாசிக்கும்

பொழுது அவர் கூடச்சென்றிருந்த இழிவான உத்தியோகஸ்தன் ஒருவன், அந்தக்கல்லறையைத்திறந்து, அந்தமதவிரோதியின் சாம்பலைக் காற்றிற் றூற்றிவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதற்கு இவ்வரசனுடைய கன்னமானது யோக்கியமான கோபத்தினாற் கன்றி "இறந்தவருடன் நான் யுத்தஞ் செய்கிறதில்லை. இந்த இடமானது பூஜிக்கப்படட்டும்" என்று சொன்னார்.

கிறிஸ்தவரல்லாத ஆரிஸ்டாட்டில் (Aristotle) என்பவர்பெருந்தன்மையான, அதாவது உண்மையான கௌரவமுள்ள மனிதனுடைய இலக்ஷணத்தைப்பற்றி, இரண்டாயிர வருஷங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குமுன்னர் வகுத்துக் காட்டினாற்போன்றே இன்றும் விளங்குகின்றது. அவர்கூற்று வருமாறு:—"பெருந்தன்மையுடையோன் இன்பகாலத்திலும் துன்பகாலத்திலும், ஒத்தமனத்தனாயிருப்பன், புகழப்படும் விதமும் இகழப்படும் விதமும், அவனுக்குத் தெரியும். அவன் வெற்றியால் இன்பமும், தோல்வியால் வருத்தமு மடையான்; அவன் அபாயமான காரியத்தினின்றும் விலகவாவது அதனைத் தேடிப்பற்றவாவது மாட்டான். ஏனெனில் அவன் யாதொன்றினுக்கும் கவலைப்படுகிறதில்லை. அவன் மௌனியாயும், சிறிது மிருதுபாஷியாயும் இருக்கிறான். ஆனாற் சமையம் வாய்ப்புழித்தன் மனத்திலுள்ளதை வெளியிட்டுத்தைரியமாகப்பேசுகின்றனன்; அவன் ஆச்சரிய பாத்திரனாயிருக்கிறான். ஏனெனில், அவனுக்கு ஒன்றும் பெரிதில்லை. கெடுதல்களைப் பொருட்டாக்கிறதில்லை; தன்னைப் பற்றியேனும், பிறரைப்பற்றியேனும் பேச இடங்கொடுக்கிறதில்லை; ஏனெனில், தன்னைத்தான் புகழவேண்டுமென்றுவது பிறரை இகழவேண்டுமென்றுவதுகருதுகிறதில்லை. அற்பசங்கதிக்காகக் கூக்குரலிடுகிறதில்லை. ஒருவரிடத்தும் உதவி தேடுகிறதில்லை."

ஆனால் அற்பத்தன்மையுடையோர், அற்பத்தனமாய் மதித்துக் கொள்கின்றனர். அவர்களுக்கு அடக்கம் உதாரத்துவம், பெருந்தன்மை ஒன்றும் கிடையாது. அவர்கள் முக்யமாய்த் தாங்கள் அயோக்கியமான வழியால் அதிகாரஸ்தானத்தையடைவதிற் சித்திபெற்றவிடங்களில் மற்றவர்களுடைய சோர்வு அல்லது அஜாக்கிரதையான

சமயத்தைப் பற்றிக்கொள்ள ஆயத்த மாயிருக்கின்றனர். தாழ்ந்த ஸ்தானத்திலுள்ள இழிதகையோரைவிட உயர்ந்த ஸ்தானத்திலுள்ள அற்பர்களை எப்பொழுதும் பொறுக்க முடியாது. ஏனென்றால், அவர்கள் தங்கள் இழிதகைமையை உணர்த்துவதற்கான சந்தர்ப்பங்களைப் பலமுறையும், பெரும்பாலும் வஹித்திருக்கின்றனர். அவர்கள் பெரிய தோற்றத்தை உண்டாக்கிக்கொண்டு தாங்கள் செய்வதெல்லாம் பாசாங்குடையவராயிருக்கின்றனர். அவர்களுடைய ஸ்தானம் உயர உயர அவர்களுடைய ஸ்தானப்பொருத்த மின்மையும், விசேஷமாய் விளங்குகின்றது. "குரங்கு உயர ஏற ஏற, அதன் வாலும், அவ்வளவிற்கு அதிகமாய்ப் புலப்படுகின்றது." என்னும் பழமொழியுண்டு.

ஒருகாரியத்தைச் செய்யும் விதத்தைப் பொருத்திருக்கிறது அனேகம். உதாரமான குணத்துடன் செய்யப்பட்டாற், பட்சமுள்ளதாக அங்கீகரிக்கத் தக்க செய்கையானது, மனமில்லாமற் செய்யப்பட்ட பொழுது, கடுமையும் கொடுமையுமுள்ள தன்றேனும் அற்பத்தன முள்ளதாக உரைப்படலாம். பென்ஜான்ஸன் (Ben Jonson) என்பவர் தரித்திரஞக வியாதியுற்றுப் படுக்கையிலிருந்த பொழுது, இராஜாவானவர், அவருக்கு வெகுமானப் பொருளுடன் அற்பத்தனமான சமாசாரமும் அனுப்பினன்; அதற்கு முரட்டுத்தனமாய் வெள்ளையாகப் பேசத்தக்க அந்தக் கவிஞரானவர், "நான் தரித்திரத்திலிருப்பதால் அவர் இதை எனக்கு அனுப்புகிறார் என்று நினைக்கிறேன்; அவருடைய ஆத்மா தான் தரித்திரத்திலிருக்கிறதென்று அவருக்குச்சொல்" என்றுமறுமொழி தந்தனர்.

மேற்கூறியதினின்றும், சஹனசீலமும் தைரியகுணமும் தான் நல்லொழுக்கம் உண்டாவதற்கு மிகமுக்யமான தென்பது தெளிவாகும். அது இவ்வுலக வாழ்க்கைக்கு உபயோகமுள்ள தென்பது மட்டோ, இன்பத்திற்குக் காரணமாகவு மிருக்கின்றது. மற்றப்படி பயமுள்ளதும் அதிலும் கோழைத்தனமுமுள்ள சுபாவமானது மிகவும் பெரிய துன்பங்களில் ஒன்றாக விருக்கின்றது. ஓர் ஞானியானவர், தன் மக்களைப் பயப்படுதல் என்னும் குணத்தை உடைத்தாயிருக்க அஞ்சுவதுபோல வேறெதற்கும் பயப்படாமலிருக்கும்படி பழ

க்குவதே தன் கற்பனைகளில் முக்யமான கருத்து என்று சொல்வது
வழக்கம். பயத்தை நீக்கப் பழக்குவதானது, கவனம் ஜாக்கிரதை
கல்வி, அல்லது களிப்பு இவைபோன்ற பழக்கத்தைப்போல சிக்ஷி
க்கப்படத்தக்கதோர் பொருளென்பதிற் சந்தேகமில்லை.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பதவிளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

முருகநாயனார் புராணம்.

(க) மகரந்தஞ்சூழ்கின்ற கூந்தலையுடைய இமையோற்பருவ
தராச குமாரியாகிய உமாதேவியாருடைய தளிர் போன்ற திருக்கர
ந்தைவரும் திருமேனியையும் மேலே சூழ்ந்த கங்கை பொருந்திய
சடைக்கூட்டத்தையுமுடைய சிவபிரான் விரும்பும் க்ஷேத்திரம்.

(உ) புகழையுடைய அந்தப்பழைய ஊரில் நல்லோருடைய
மனம் போல அந்நல்லோரணிந்த காவல்பொருந்திய திருநீற்றின்
சிறந்த வெள்ளிய திருத்தமான ஒளியால் இருளும் வெண்மையாக
விரியும் இரவையேயன்றி வாசனை பொருந்திய பூக்களின் மீதுள்ள
அழகு பொருந்திய தேனைப்பானிக்குஞ் சிறகையுடைய வண்டுகளுங்
களங்கமற்றுப் பிரகாசிக்கும்.

(ங) பொருந்திய இசையைத்தேரும் வண்டுகள் அரும்பு பொ
ருந்திய மிருதுவான கொம்புகளின் பக்கங்களிலலைய அழகிய மதுர
த்தையுடைய தேனைச்சொரிவன வாசம்பொருந்திய புட்பங்களின்
வாய்களே யல்ல; குளிர்ந்தசோலையின் எப்பக்கங்களிலும் பொருந்
திய மடமையையுடைய மிருதுவான நாகணவாயின் பண்போன்ற
மொழியையுடைய அழகிய வாயும் தேவாரப்பதிகமாகிய செழிய
தேனைப் பொழியும்.

(ச) வண்டுகள் பாட நீரையுடைய தடாகத்திலே மலர்ந்து
கள்ளாகிய நீரரும்புவன வாசம்பொருந்திய அரும்பவிழ்ந்த குளிர்ந்த

தாமரைகளேயல்ல; சிவபிரானுடைய திருப்பாட்டி னமுதமானது பெருகச் செவியிலே நிறைக்கின்ற அடியாருடைய முகமாகிய தாமரைகளுந் துளிபொருந்திய கண்ணீரரும்பும்.

(௬) இலையின் மீதுள்ள ஞெண்டு நித்திரையினின்று மெழ அலர்ந்த செந்தாமரை மலரையுடைய வயல்களிலுள்ள கயன்மீன்கள் மடையின்மீது பாய்கின்ற திருப்புகலூரில் நிலைபெற்றுவாழுந் தன்மையராய்.

(எ) பொழுது விடிதற்கு முன்னெழுந்து சுத்தமாகிய நீரில் ஸ்நானஞ்செய்து சென்று பரந்த அழகையுடைய தம் பெருமானாகிய சிவபிரானது திருமுடியின்மீது ஆகாயகங்கையும் சந்திரனு முலாவுகின்ற பக்கத்தே வாசனையைக்கால, அலரும் பருவத்தோடு அளவிறந்த மலர்களைக் கொய்து வேவ்வேறாகத் திருப்பூங் கூடைகளிலிடுவார்.

(அ) கோட்டுமலருள்ளும், நிலமலருள்ளும், நீர்மலருள்ளும், கொடிமலருள்ளும், பெருமை மலர்ந்த சுருதியை மலர்ந்த திருவாயிலேகாட்டிய புன்முறுவலினிலவு பரக்கக் கனகவரையிற் பன்னகநாண்பூட்டு மொருவரது திருமுடிமேற் புனையத்தகும் புழுக்கடி முதலியகுற்றமில்லாத மலர்களைத் தெரிந்து. நால் வகை மலர்களுக்குள்ளும் புனையத்தக்க மலர்களைத் தெரிந்து எனக்கூட்டுக.

(௯) கோக்கின்ற கோவை மாலைகளும், சுருக்கிக்கட்டும் இண்டைமாலைகளும், தாமத்தோடு இணைத்துக்கட்டிய வாசம்பொருந்திய மாலைகளும், தண்டைப் போலக் கட்டிய கண்ணிமாலைகளும், காம்புகளிற் பிணைக்கும் பிணையன் மாலைகளும்.

(௧௦) அவ்விடத்தே திருத்தொண்டுகளுக்கு நியமித்த காலங்களிலே யமைத்து; பாங்கிற்புரிந்து- உரிமையோடு செய்து. பரமர் பதிகப்பற்றான அஞ்செழுத்து - சிவபெருமான் மீது பாடப்பட்ட தேவாரத்திருப்பதிகங்களினது பற்றப்படு பொருளாயுள்ள பஞ்சாக்ஷரத்தை. நீங்காமல் நாவிலேயுணர்கின்றவர்.

(௧௧) (விதிவிலக்குக்களுள்) விலக்கு முறைமை யொழிய இத்தகுதியாக ஒழுகுகின்ற முருகநாயனார் தெளிவாகிய வேதங்களில்

முதலாகப்பேசப்படும் ஞானத்தை மாற்றுயர்ந்த பொற்கிண்ணத் தன்னி உலகங்களை படைத்துக்காக்கின்ற உமாதேவியாருடைய முலைப்பாலுடனுண்ட திருஞான சம்பந்தப்பிள்ளையாருக்கு நட்பையுடையருமாம் பெருமையையுடையருமாயினர்.

(கஉ) பிரம விட்டுணுக்களாகிய இருவரும் அன்னவடிவும் பன்றி வடிவுமாய் அறியும்படி தேடியும் அறியாமல் நிலைபெற்ற திருப்புகலூரில் வீற்றிருப்பவரை.

(கங) அருளின் பொருள் - அருளாகிய இனியபொருள்.

(கச) கரவிலவர் - கரவிலவர்பால் வருவாரை,கரவில்லாதவரிடத்தே பிரசன்னராவாரை. (திருப்புகலூரிலிருக்கு மாலயத்துளொன்று, வர்த்தமானேச்சுரமெனப்பெயர் பெறும்.)

உருத்திர பசுபதிநாயனார் புராணம்.

:o:

(ச) சுத்தமாய் அன்பொடு தொடர்ச்சியிலிடையறாத அவ்வுருத்திரத்தில் அன்புபொருந்திய மனத்தை யுடையராய் அத்தொழிற் கணின்றார்.

(ரு) சங்குகளலையுங் கரையிற் புட்களி னொலியொலிக்க, பக்கத்திலே தேனைவிரும்பும் மேன்மையான வண்டொலிக்க, கரியவரால் பிறழுகின்ற வரிசையான நெடிய கயல்மற்சங்கள் பொருந்திய நீரிலே நெருப்பெழுந்தாற்போன்ற வாசனையோடு முகைவிண்ட செங்கமலங்களையுடைய மிருதுவான தடாகத்திற் பொருந்தி.

(அ) அமர்ந்தருள்செய்ய - அவருடைய உள்ளத்திருந்து அருள் செய்ய.

(கo) தில்லைப்புற வெல்லையி லென்க. (உருத்திர மந்திரஞ் செபித்து வந்தமையால் இவருக்கு உருத்திரபசுபதி நாயனார் என்னுந் திருநாமம் உளதாயிற்று.)

திருநாளைப்போவார் நாயனார் புராணம்.

—:o:—

(க) விளங்குகின்ற நீரையுடைய கொள்ளிட நதியானது, பொற்பொடிகளையும் செழியரத்தினங்களையும் திரையாகிய கைகளால் அள்ளிக்கொடுக்க இருமருங்கினுமுள்ள தாமரைகள் மலர்களாகிய கைகளால் ஏற்கப்படுகின்ற அகன்ற வயல்பொருந்திய சோழவளநாட்டில், மேற்காநாட்டில் ஆதனூரானது, உலகத்தவர் சிறப்பைக் கிளந்தெடுத்துப்புகழும் பழைய வளஞ் செறிந்த நகரமாம்.

(உ) விபூதியினது பரந்த பெரிய ஒளி நெருங்குகின்ற அந்த நகரத்தில், முற்றிய கரும்பின்சாற்றுலலைகின்ற வலிமைபொருந்திய வரம்புகளையுடைய வயல்களிலே தகட்டுவடிவமாகிய வரால் மீனானது எழும்ப, பெருமைபொருந்திய உழுமாடு சுமக்கின்ற கலப்பையின் வலிய கொழுக்கிழித்த சாலின்வழியே ஊர்ந்து சென்று சேற்றிலே ஞெண்டுகள் கருவையீன, செந்தாமரை தேனைச்சொரியும்.

(ஙூ) அலைய - அலைத்தலாலும். சூழ - சூழ்தலாலும். (பூஞ்சோலை புனன்மழையைப்பொழிவித்தலும் மதுமழையைப்பொழிதலுமொழியா.)

(ச) விரிந்த பாளைகள் மணக்கின்ற பசியகாய்களையுடைய குலைகள்பொருந்திய தென்னைகளினடி யதிரும்படி மேலேமுட்டிக், குண்டினின்றுமெழுந்து பாய்ந்த வாளைமற்சங்களானவை புதையும்படி சொரிந்த தென்னம் பழங்கள் அழகிய பலாமரத்தின் நீண்டுமுதிர்ந்த பழம் வெடித்ததேன் பெருக்கில் மிதக்க எழுந்துபாயும்.

(ரு) செயல்படு பைந்துடைவை - தோட்டம்.

(சு) மேற்சொல்லிய வளங்களையுடைய புறத்தே வயலின் பக்கத்திலே பெரியகூட்டமாகச் சுற்றத்தார் விரும்பிய கீழ்மையாகிய உழவுத்தொழிலைச்செய்கின்ற பறையர் கூட்டம் நெருங்கி,பரந்த பசிய சுரைக்கொடி மேலே படர்ந்த பழைய கூரையையுடைய சிறிய குடிசைகள் பொருந்திய பல சிற்றில்கணிறைந்துள்ளது ஒரு புலைச்சேரி.

*

(எ) கூரிய நகங்கள் பொருந்திய மிருதுவாகிய அடியையுடைய கோழிப்பேடுகளின் சிறிய குஞ்சுகளின் கூட்டங்கள் சுழன்று திரிகின்ற வார்பொருந்திய முற்றத்தினின்ற செறிந்த நகங்களையுடைய நாயினது துள்ளுகுட்டியைக்கரிய இரும்பாலாகிய காப்புச்சொரிந்த கையையுடைய கரியபறைச்சிறுவர் பறித்துக்கொண்டோட அவர்களுடைய அரையிற்கட்டிய இருப்புச்சதங்கை பொருந்திய சிறிய மிருதுவான நாயின் குரைப்பை அடக்கிவிடும்.

(அ) வலிய சிறிய தோலின்மீது மள்ள ஸ்திரீகள் பிள்ளைகளை நித்திரை செய்விக்கின்ற நிழலையுடைய மருதமரங்களும், தன்னுடைய முட்டையோடு மென்மையுடைய பேட்டுக்கோழிகள் அடை கிடக்கின்ற விசாலித்த மிடாவைப் பதித்திருக்கும் நிழலையுடைய மிருதுவான வஞ்சிமரங்களும், வார்க்கட்டையுடைய பறைகள் தூங்குகின்ற மாமரங்களும், சிறியதலையையுடைய நாய்க்குட்டிகளுக் கிருப்பிடமாகிய பள்ளத்தைப் பக்கத்திலுடைய தென்னைகளும் ஆகிய இவற்றை எவ்விடத்திலும் உடையது.

(கூ) திண்ணிய வலிமைசெறிந்த புலைஞர்கள் தொழிலை முயலுகின்ற விடியற்சாமத்தின் குறியை அளக்கக் கூவுகின்ற சிவந்த சூட்டையுடைய சேவல்களின் இருப்பிடத்தையுடைய வாசனை பொருந்திய திண்ணிய கோடுகளையுடைய காஞ்சிமரத்தின் விரிந்த நீழலின் பக்கமெங்கும் நெறித்த கூந்தலையுடைய எளிய பறைப் பெண்களுடைய நெற்குற்றுப்பாட் டொலியே பரவும்.

(கo) புட்களும் தண்புனலிலே கலிக்கும், கட்டவிழ்ந்த குவளைப்பூ மதுவைவிள்ளுகின்ற பசியகூந்தலிலே நெற்கதிர்களைத் தரித்த புல்லிய புலைச்சியர்கள் கள்ளுண்டு தள்ளாடுகின்ற கால் அசைந்து நடக்கக் களியாட்ட பருதற்கேற்பக்கறங்குபறையும் அத்தண்புனலையுடைய பொய்கையின் பக்கமெங்குங் கலிக்கும்.

(கக) கடைஞரிருப்பின்வரைப்பு-புலைச்சேரி. புலைமையான்ற தொழிற்குலத்தார் - பறைத் தொழிலில் மிக்க உரிமையை யுடையவர்.

(கஉ) வருபிறப்பின் வழிவந்த அறம் - தாம்பிறந்தபுலைப்பிறப்பினது பரம்பரையாக வந்ததருமம்; என்றது அடித்தொண்டினை.

(கரு) பறைத்துடவை யுணவு உரிமையாக்கொண்டு - ஊரிலே பறையடித்தற்காக விடப்பட்ட தோட்டவருமானங்களை உணவுரிமையாகக்கொண்டு. தொண்டினுள் முதன்மையாக நின்றவர்.

(கசு) செய்வனவும் - செய்தலும்.

(கஎ) இசை - இசைத்தமிழ். அதுநேர்வார் - அதற் குடன்படுவாராய். திருமுன்புபோரேற்றை விலங்க - சந்நிதியிலே யுள்ள போரையுடைய நந்திதேவரை விலக. புலப்படுத்தார் - தரிசிப்பித்தார்.

(கஅ) பிறவியை எடுத்த உலகத்தைக் கடப்பவர்கூத்தாடுதலாகிய தொழிலைவிட்டு நமஸ்கரித்தெழுந்து முதுகோடு வாரலையப் போவார் ஓரிடம் பள்ளத்தோடு பொருந்தி யிருத்தலைக்கண்டு. அவல்—பள்ளம்.

(கக) விசாலம் பொருந்திய குளத்தளவாக உண்டாக்கியபின்பு.

(உக) நன்றும்—பெரிதும்.

(உஉ) சிறுபூளைப்பூவைப் போல் நிலையின்றிச்சுழல்கின்ற பிறவி.

(உங) அல்குந் தங்குலம்—குறைந்த தங்குலம்.

(உச) திருவெல்லை முதலியவற்றையுங்கடந்து ஆகுதிகள் பொருந்திய வேதிகைகள் மூவாயிரம் அங்கேயுளவென்று சொல்வார்.

(உசு) ஏசறவு—துக்கம்.

(ஙக) சூழ—சூழ்ந்து.

(ஙங) உந்திக்கமலத்து வந்துதித்தபிரமனை.

(ஙஎ) வினைப்பாசமற முயன்றவராகிய திருக்குறிப்புத்தொண்டர் செய்த.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை.

கற்பு.

(௩௯௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

எமது நபிகள் பிரான்முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு மாற்றலனாகிய அபா சுபியானது நற்றவத்தாலுதித்தபொற்கொடியாகிய சையிதத்து என்னுஞ்செல்வியார் அபூபக்கர் சித்திக் குறலியல்லாகு அன்கு அவர்கள் புதல்வராகிய அப்துற்றகுமான் என்பாரை மணந்து தந்தையாரகத்துச் சிந்தைகளித்துறையு நாளில் தம் நாயகர் தம் மாதுசிகாமணியை விடுத்துத் தம்தந்தையார் பாற்செல்லத் தொடங்குழி காதலர்ப்பிரிய ஓர்கணமும் பொறாத மேதகு கற்புடை மெல்லியலார் தமது தாய் தந்தையரைப்பிரிந்து வாழ்தலல்லது நாயகர்ப் பிரிந்து நடுங்குதுயர்கொள்ளச் சம்மதியே னெனக்கூறித் தாமும் உடன்செல்கிற்றுழித் தந்தையேவலா விடைச்சுரத்துத் தடுக்கப்போந்த போர்வீரர் பல்லாயிரரையும் தாமே கொன்று வென்று நீக்கி மணவாளரொடு சென்று குணமாக வாழ்ந்தனர் என்னுஞ் சரிதம் எமதுமார்க்க நூலாராய்ந்தவர்களெவரும் அறிவர்.

இதனை,

எங்கணன் னயினர் முகம்மது நபியை
　யிருதயத் திருத்தியென் றகப்பன்
றங்கிய மதின வளநக ரதனிற்
　சார்வதற் கின்றியான் பயண
முங்கடன் னினைத்தோ டுனையரு டாதை
　யுறுமனை சேர்ந்திரு வெனவே
திங்களொன் றிலங்கு முகமலர் தனக்கோர்
　தீயெனச் சுடுஞ்சொல்சொற் றனரால்.

அன்னவை யுரைப்ப வரிவைவசை யிதத்து
　மையனை யிழந்து தன்றலைவ
ருன்னிய படியப் பெரும்பதி புகுத
　வுமக்குமுன் பயணமென் றுரைத்தே
மின்னிய வடிவாள் வலிபெருங் கணவன்
　விளங்குமென் காத்தினைத் தீண்டி
நன்னயம் பொருந்து நபிதிருக் கலிமா
　நாவினால் நயம்பட நவின்றாள்.

என்னுஞ் செயிதத்துப் படைப்போர்க் கவிகளானும் பிற கவிகளானும் அறிக.

நபிஈசா அலைகிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் லாபீர் என்னும் ஒரு ஆலீம் அவர்களின் நற்றவப்புதல்வியாராகிய இஸ்லாம் நாச்சியாரை மணஞ்செய்துகொண்ட கனவானொருவர் சின்னாட்சென்றுழி "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்ற முதுமொழியை மேற்கொண்டு வேற்றுத்தேயம் புகுவாராய் தம்மருமை மனையாட்டியைத் தமது தம்பிவசம் ஒப்புவித்தேகினர். தம்பியாகிய தூர்த்தன் அப்பெண்மணிமீது மோகித்து நெருங்கித் தன்கருத்தை வெளியிட்டனன். அதுகண்ட அக்கற்பின் செல்வியார் சிறித்துரத்தினர். அக்கொடியோன் மனம்புழுங்கி யந்தமங்கையர் சிகாமணிமீது விபசாரக் குற்றங் கற்பித்து எம்மார்க்க வழக்கப்படி அப்பொற்பின் செல்வியை யூர்ப்புறத்தே நிறுத்திக் கல்லாலெறியச் செய்தனன். கற்பின் கொழுந்தின்மீது கல்லெறிபடுமா? வில்லெறியம்பும் விலகுமன்றோ! கற்கள்யாவுஞ் சிறிதேனும் ஊனஞ்செய்யாது சுற்றிப்போதிவுற்றன. கற்குவியற்குள்ளுற்ற கற்புக்குவியல் இறந்ததெனக்கருதி மன்பதை களகன்றனர். அக்காலையவ்வழிப்போந்த வர்த்தகர் ஒருவர் அந்நிகழ்ச்சியையறிந்து அம்மங்கையர் மணியையெடுத்துத் தம் ஒட்டகத்தேற்றிக்கொண்டேர்புக்குத் தமது புத்திரியாகவேபாவித்துத்தம்மில்லத்து இருத்தினர். அதுகாறும் மகப்பேறில்லா அவர்க்கு இம்மங்கையர்அணிகலம் அபிமான புத்திரியாகவந்த விசேடத்தானே ஓராண்மகவு பிறந்தது. அவ்வீட்டுப் பணியாளனொருவன் இவ்வரிவையை மோகித்துப் பலன்படாமையாற் சினமிக்கு ஓர்நாளிராவில் அவ்வருமந்த ஆண்மகவைக் கத்தியாற் கொன்று இரத்தந்தோய்ந்த அக்கத்தியை யிப்பெண்மணி படுத்திருந்த பக்கல்வைத்து நீங்கினன். வைகறையில் எஜமானாகிய வர்த்தகர் குழந்தை கொலையுண்டதையும், கொலைக்கருவி யிப்பெண்மணிபக்கத்திலிருத்தலையுங்கண்டுஇஃது எல்லாம் வல்ல இறைவன் அருளால் நிகழ்ந்தசெயலெனக்கருதி அப்பெண்மணியை யாதொன்றுஞ் சொல்லாது இவ்வூரைவிட்டு ஏகுதியென்று சிறிது பொன்கொடுத்து அனுப்பிவிட்டனர்.

அப்பெண்கள் திலகம் அவ்வூரை விட்டுக்காடு கடந்து ஒரு நகரத்துட் போகுங்கால் மன்னவர் இறைப்பொருட்காகக்கட்டுண்டு கல

ங்கு மொருவனைக்கண்டு இரக்கமுற்று அவன் தாயாரிடம் தங் கைப்பொருளைக் கொடுத்து உன் மகனை மீட்டிக்கொள்கவெனப்பகார்ந்தப் பாற் காட்டு வழியே செல்லாநிற்ப, கட்டவிழ்க்கப்பெற்ற மட்டிமகன் அந்நன்றியைக் கருதாது கெட்ட சிந்தையுடன் பின்றொடர்ந்தான். அவன் வரும் கருத்தறிந்த மாதுசிகாமணி மனம் நொந்துஇறைவனைச் சிந்தித்து இக்கொடியோன் என்னை யணுகாவாறு இக்கோடு ஒரு பெருநதியாகுக வெனத் தரையிற் கீறலும் அவ்வாறே ஒரு பேராறு பெருகி வந்தது. அதைக்கண்ட கண்டகனும் அஞ்சியகன்றான்.

பின்னர் அப்பதிவிரதா திலகம் பலபடக்கவன்று கண்டாரை மயக்கும் தனது கட்டழகு வடிவை வெறுத்தும் தந்நாயகர்க்காண வேண்டும் உழுவலன்பால் உயிர் துறத்தலைத்துறந்தும் தவக்கோலம் பூண்டு கடற்கரையருகு தங்கி எத்தகைப் பிணிகளையும் விலக்கும் மாந்திரீக வலியுற்றுறைவாராயினர். ஒரு தவப்பெண் மந்திர சித்தியால் எப்பிணியும், எப்பேயும் விலகி யொழிகின்றன வென்னும் விஷயம் யாண்டும் பரவியது.

வாணிபத்தின் பொருட்டுச் சென்ற இம்மங்கையர்க் கரசிபாற் காதலர் திரும்பி வந்து தம்பியைக்கண்டு அவன் சொல்லால் தம் மனைவி பழி பூண்டுகல்லெறியேற்றிறந்தாளெனத் தெரிந்து கவன்றிருந்தார். இவ்வாறிருக்க, முதற் கொடியோன் குட்டரோகத்தாலும், இரண்டாவது கொடியோன் கைவழங்காமலும் மூன்றுங்கொடியோன் கால் வழங்காமலும் பெருந்துயருற்று, எத்தனையோ வயித்திய சிகிச்சை செய்தும் வியாதி நீரவில்லை. இம்மூவரும் மேற்கூறிய தவமூதாட்டி மந்திர சத்தியால் தீர்க்கக்கருதி அவரில் முதலாம் வஞ்சகன் தனது தமையனுடனும், இரண்டாங் கொடியோன் தன் எஜமானுடனும் மூன்றும் பாதகன் தன்றாயுடனும் அங்குச் சென்றனர்.

அப்பெண்மணியும் பல்லோர் குழுவில் இம்மூவரையும் நிறுத்தியிவர்கட்கு இவ்வியாதிகள் வந்தகாரணங்கூறச்சொல்லி யப்பொழுதே தமது கற்பின் தன்மையைத்தமது கணவரும் பிறரும் அறியக் காட்டி யன்னார் வியாதிகளையும் தீர்த்தருளினர். ஆ! ஆ! என்ன

ஆச்சரியம் கற்பின்பெருமையை யளவிட யாராலாகும். கற்புடை மகளிர் அரிய பெரிய காரியமெதுவுஞ்செய்வர். இதுபற்றியன்றோ,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. என்றார் பொய்யாமொழியார்.

இவ்வெல்லாமறிந்த கணவனார் அகமகிழ்ந்து தம்முயிர்க்காதலியைத் தழுவியழைத்துத் தம்மகஞ்சென்றிருவரு மின்புற்றிருந்தனர்.

இவ்விஷயம் இருபதிக்கும் வள்ளலாகிய நபிகள் நாயகம்முகம்மது ஸல்லல்லாகு அலைகிவ ஸல்லமவர்களுடைய (வசியத்) என்னு மரணோபதேசத்தை விளக்கிக்கூறும் பொன்னரியாமாலை என்ற நூலில் "வெம்புந்தவங்கொண்ட ஈசாநாளில்" என்ற தொடக்கத்தையுடைய செய்யுளில் குறிப்பிக்கப்பெற்றிருத்தல் காண்க. இன்னும் எம்மதத்தினருள், கற்பினிற் சிறந்த பொற்புறு மடந்தையர் பற்பலருளர்; அவர்களையும் அவர்கள் சரிதத்தையும் ஈண்டு விரிப்பிற் பெருகுமென்றஞ்சி இம்மட்டோடு விடுத்தாம்.

இதுகாறுங் கூறிய வாற்றால், பெண் மக்கள் மட்டும் தமது நாயகர் மாட்டு உழுவலன்புற்று வேற்றுப் புருடரைக்கனவினும் கருதாது பதிவிரதாதரும வொழுக்கினிற்றல் வேண்டுமென்பதைக் கண்டாம். இவ்வாறே புருடராயினார் தமது பத்தினிகளிடத்து உழுவலன்புடையராய்ப் பிறமாதர் பக்கல் நினைவு செலுத்தப்பெறாது வாழவேண்டுங் கடப்பாடு பெற்றிலரோ எனிற் கூறுதும்; காமம் விலக்கப்படுவதென வகுத்ததும் பிறனில் விழையாமை வரைவின் மகளிரை விழையாமை கூறுதலும் ஆடவரும் ஏகபத்தினி விரதமுடையராதல் வேண்டுமென்னுங் கருத்துப்பற்றியேயாம். எமது மார்க்கம் நான்குபத்தினிகளை மணத்தற்குடன்பாடுறினும், அதற்கேற்ற விதிகளை யுற்றுநோக்குமிடத்து ஏகபத்தினி விரதமே சாலநலந்தருவதென்றல் ஊகித்தறியத் தக்கது.

பண்டைக்காலந் தொட்டு இன்றளவும் நமது நற்றமிழ்ப் புலவரானார் பெண்களை மிழித்தும் ஆடவரையுயர்த்துங் கூறும் வழக்குடையராதல்பற்றி, ஆடவர் பரநாரியரைக் கருதல் கூடாதென்று ஓரோவிடங்களிற் கூறியிருத்தலன்றி மிகக்கடிந்து கூறிற்றிலர். அறி

வும் அன்பும், புண்ணிய பாவமும், சுவர்க்கநரகமும் இருபாலாருக்கும் பொதுவாக நிற்கவும், இவருள் ஒருவரையிழித்தும் ஒருவரையுயர்த்துங்கூறுதல் நீதியாகுமா? இருபாலாருள்ளும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் இருத்தலியல்பு. ஒழுக்கநிலைகள் இருபாலார்க்குமொப்பவிதிக்கப்படலே பொருத்தமுறும். ஆடவர்க்கும் ஏகபத்தினி விரதம் வேண்டப்படுவதொருநிலை. இதுபற்றியன்றே,

"ஆசலம்புரி யைம்பொறி வாளியும்
காசலம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பு நெறியின் புறஞ்செலாக்
கோசலம்புனையாற்றணி கூறுவாம்."

என்னுங்கவியில் ஆசலம்புரி யைம்பொறிவாளி என ஆடவர் நெறியையும் கண்ணெனும் பூசலம்பு என மடவார் நெறியினையும் கூறினர் கல்வியிற் பெரியாரும்; இருபாலாருள்ளும் ஆடவர் நெறியையே முதற்கட் கூறுதலான் அவர்க்கு அந்நெறி இன்றியமையாது வேண்டற்பாற்றென்பதும் பெற்றும்.

அன்றியும் தாசரதி ஏகபத்தினி விரதமுடனிருந்ததோர் பெற்றியும் பாராட்டற்பாலதேயாம். இதனை ஜானகி அநுமானிடம் கூறும்பொழுது,

"வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த விப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந் தொடேனென்ற செவ்வரந்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்."

எனக்கூறியருளியதும், ஸ்ரீ ராமபிரானுக்குப் பிராட்டியே உயிரென அநுமான் கூறியதும், அஃதாவது,

"தேண்டிநேர் கண்டேன்வாழி நீதிலனெங்கோனுகம்
பூண்டமெய்யுயிரே போகப் பொய்யுயிர்போல நின்ற
ஆண்டகை நெஞ்சினின்று மகன்றிலை யழிவுண்டாமோ
ஈண்டு நீயிருந்தா யாண்டவ்வெவ்வுயிர்விடு மிராமன்."

என்று கூறியதும் உற்றுநோக்குழிப் புருடரொழுக்க நிலையும் புலப்படும். அன்றியும்,

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு."
"நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
பிறர்க்குரியாள் தோள்தோயா தார்"

என்புழி ஆண்மைக்குணங்களிற் றலையாயது இவ்வொழுக்கமே யெனக்கொண்டு பிறன்மனை நோக்காமையைப் பேராண்மை யெனவும்; பிறர்க்குரியாள் தோள்தோயாதாரே நலத்துக்குரியார் எனவும் புகழ்ந்தும்,

"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்"
"பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்."

எனப் பிறனில்விழைதலை யிகழ்ந்தும் கூறியருளினர் செந்நாப் போதார்.

ஆதலின், கற்புஎன்ற ஒழுக்கம் எல்லா ஒழுக்கங்களினும் மிகச் சிறந்த தொன்றென்பதும், அஃது இருபாலாரானுங் கொள்ளற் பாலதென்பதும் என்னறிவிற்குத் தோன்றிய வளவிற் கூறினேன்.

இதுகாறும் எனது புன்சொற்கட்குச் செவிகொடுத்திருந்த பேரறிவாளர்களிடத்து நன்றிபாராட்டி இம்மட்டில் நிறுத்துகின்றேன்.

இங்ஙனம்,
சோதுகுடி.
எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர்.

தலமுறையாராய்ச்சி.

———:o:———

(முற்றொடர்ச்சி.)

பிறதலங்களின் மேன்மை தங்கிய தலம் கோயில். கோ-மேன்மை, இல்- இடம்; இக்கோயில் தலையினுட் புறத்தினிருக்கும் ஆயிரவிதழுள்ள கமலமெனப்பெறும் மூளை ஆயிரக்கான்மண்டபமாயும், அம்மூளையின் மேற்புறத்துள்ள சந்திரபுட்கரணி யெனப்பெறும்

அமுதவாவி சிவகங்கையாயும். விசத்தித்தானம் ஸ்ரீகுருமூர்த்தி ஜோதிலிங்கம் எழுந்தருளியிருக்குமிடமாயும், திருவைந்தெழுத்துக்கள் ஐந்து வெள்ளிக்களிற்றுப்படிகளாயும், வித்தை அவ்விடத்துள்ள கதவாயும், தத்துவதாத்துவிகங்களாகிய தொண்ணூற்றாறு பதார்த்தங்களும் தொண்ணூற்றாறு பலகணிகளாயும், நான்கு வேதங்களும் நடுவிலுள்ள நான்கு பொற்கம்பங்களாயும் இருபத்தெட்டு ஆகமங்கள் இருபத்தெட்டுச் சந்தன மரக்கம்பங்களாயும், சுத்தவித்தை அவ்விடத்துள்ள இடமாகவும், பிரணவபீடம் இரகசியமுதல் நடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடம் வரையில் உள்ள இடமாயும், ஸ்ரீமதானந்த நடராஜமூர்த்தி அப்பிரணவ பீடத்தின் கண்ணே சகளத்திருமேனியாயும், வியக்தாவியக்த லிங்கம் அதன் வாயுபாகத்தில் சகள நிஷ்களமாயும், ஆரண ஆகமங்கள் அறிந்தோதாக்குணவரம்பு கடந்த அழியாப்பரஞ்சுடராயும் சிதாகாசவடிவாயும் விளங்கும் (சிந்மயம்) திருச்சிற்றம்பலமாயும், வாமை முதலிய நவசத்திகள் விமானத்தின் மேலுள்ள ஒன்பது கும்பங்களாயும், அறுபத்துநான்கு கலைகளும் அவ்விமானத்துள்ள கைமரங்கள் அறுபத்துநான்காயும், மனிதனால் ஒவ்வொரு தினமும் விடும் சுவாசங்கள் இருபத்தோராயிரத்தருநூறும் செப்போடுகள் இருபத்தோராயிரத் திருநூறாயும், அச் சுவாசசஞ்சார ஆதாரமான எழுபத்தீராயிரம் நாடிகள் எழுபத்தீராயிரம் ஆணிகளாகவும், கனகசபையின்கண் ணுள்ள பதினெண் கம்பங்கள் பதினெண் புராணங்களாயுள்ள மணிபூரகஸ்தானமாயும், இராஜசபைஆயிரக்கான்மண்டபம் அன்னமயகோசமாயும், தேவசபை (பேரம்பலம்) பிராணமயகோசமாயும், நிருத்தசபை மனோமயகோசமாயும், கனகசபை விஞ்ஞானமயகோசமாயும், சிற்சபை ஆனந்தமயகோசமாயும், மனிதருடைய இருதயம் சரீரத்தின் நடுவிலிராமல் சிறிது இடப்புறத்தே விலகியிருத்தல்போலக்கருப்பக்கிருகம் ஆலயத்தின் நடுவுக்கு இடப்புறத்ததாயும், இருதயத்தில் அர்த்தம் பிரவேசிக்கும்வழி நேரிலன்றிப்பக்கங்களிலிருப்பது போல் இவ்வாலயத்தின் வழிகள் கர்ப்பக்கிருகத்தின் பக்கங்களிலுள்ளதாயும், சரீரத்தினும் பன்னிரண்டங்குலம் அதிகமாய பிராணவாயு இரண்டாவது மதிற் கோபுரமாயும், சிற்சபையின் தென்புறம் மகாவிஷ்ணு ஸ்தானமாயும், அதன் தெற்கு சங்கார நிருத்த மூர்த்தி ஸ்தானமாயும், அதற்

குத்தெற்கு கணபதி ஸ்தானமாயும், தருமவடிவாகிய இடபதேவஸ்தானமாயும், கோபுரமாயும், ஓர் மகாயோகி வடக்கே சிரசும் தெற்கே பாதமுமாயிருப்பதுபோல் மகாமேன்மையாய் அமையப்பெற்றிருத்தலினால் கோயில் என இதனையே சிறந்தெடுத்தோதப் பெறுவதாயிற்று.

தில்லைவனமாகலின் தில்லைவனம் என்றும் பெயர். (வியாக்கிரபாதர்) புலிக்கான் முனிவர் பூசித்துத் தைப்பூசநாளில் பெரும்பற்றாகத் திருநடங்காணப்பெற்றதனால் பெரும்பற்றப் புலியூர் என்றும் பெயராயிற்று.

கோலம் தலவிருக்ஷமாகப் பெற்றதலம் திருக்கோலக்கா. கோலம்-இலந்தை; இத்தலம், திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்கு பொற்றாளம் கொடுத்தகாரணம்பற்றித் திருத்தாளமுடையார் கோயில் என வழங்கப்பெறுகின்றது. இதனைச்சுந்தரமூர்த்திநாயனார் இத்தலத்திற்கருளிச் செய்த பதிகத்தின் எட்டாம் பாசுரத்திலே "நாளுமின்னிசையாற்றமிழ் பரப்பு ஞானசம்பந்தனுக்குலகவர் முன், றாளமீந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளனை" என அமைக்கப்பெற்றிருக்கின்றமையறிக.

பசு பூசைசெய்து தனது குளம்பின்வடு திருமுடியிற் காணப்பெறும் தலம் திருக்குளம்பம். இது பதிகங்களில் திருக்கோழம்பம் எனமருவிக்காணப் பெறுகின்றது.

சக்கரவாகப்புள் பூஜித்த ஆலயம் திருச்சக்கரப்பள்ளி.

பராசக்தி சிவபெருமானைத்தழுவி முத்தம் கொடுத்ததலம் திருச்சத்தி முத்தம். இது தேவாரத் திருப்பதிகங்களில் திருச்சத்திமுற்றம் எனக்காணப் பெறுகின்றது.

மகாசாத்தா பூசித்துப்பேறு பெற்றதலம், சாத்த மங்கை.

சூரியன் மனைவி சாயாதேவி பூசித்துப்பேறு பெற்றதலம் (சாயாவனம்) சாயாகாடு திருச்சாய்க்காடு என மருவிப் பதிகங்களிற் காணப் பெறுகின்றது.

காமதேனுவின் பால் பெருகியெங்கும் உறைந்திருந்த வெண்ணையை வசிஷ்டர் சிவலிங்கமாக்கிப் பூசித்துச் சுவாமிக்கு வெண்

ணெயிலிங்கேசுரர் என்று பெயருமிட்டு அவ்விலிங்கப் பெருமானை வேறிடத்தில்வைக்க எடுக்கும்போது அது வாராமற் சிக்கிக்கொண்ட தலம் சிக்கல்.

திரிசிரன் என்னும் அரக்கன் பூசித்த தலம் திரிசிராப்பள்ளி.

சிறு கிராமமான தலம் சிறுகுடி.

வாணிபத்தின் பொருட்டுப் பிறதேயஞ்சென்ற ஓர் வாணிபனது கர்ப்பவதிக்காகச் சிறுபொன் தினமும் சந்நிதியில் வைத்துக் காப்பாற்றியருளியதலம் திருச்சிற்றேமம். ஏமம்-பொன்.

விநாயகமூர்த்தி கஜமுகாசுரனை இரத்தம் பெருகிச் செங்காடாய் ஓடும்படி சம்ஹாரம்செய்த தலம் திருச்செங்காட்டங்குடி; அக்கஜமுகாசுரனைக்கொன்ற பழிநீங்கும்பொருட்டுக் கணபதி பூசித்த காரணத்தால் கணபதீச்சுரம் என்று இவ்வாலயத்திற்குப் பெயர்.

குபேரன் செம்பொன்னினலர்ச்சித்துப் பேறு பெற்ற தலம் திருச்செம்பொன்பள்ளி.

சேய் (குமாரக்கடவுள்) தாம் உறைதற்கு நல்ல ஊர் என்று உவந்தமை கண்டு தேவர்கள் அப்பெயரிட்ட தலம் திருச்சேய்நலூர். இது திருச்சேய்ஞஞலூர் என மருவியது.

தௌமியருஷி சேற்றினிடையிற் பூசித்ததலம் திருச்சேறை.

. சிவபெருமான் தன் பக்தனை அருளாளன் என்னும் மறையவன் பசியால் வருந்தும்போது அவனுக்காக எடுக்க எடுக்கக் குறையாதிருக்கும்படியான சோறு அளித்தருளிய தலம், திருச்சோற்றுத்துறை.

புட்பவனத்தினிலுள்ள பெரிய கோயில் தண்டலைநீணெறி. (தண்டலை - புட்பவனம். நெறி - கோயில்.)

தருமன் (இயமன்) பூசித்ததலம் திருத்தருமபுரம்.

மகாவிஷ்ணு சிவபெருமானைப்பூசித்து (பாஞ்சசந்யம்) தலைச்சங்கு பெற்றதலம் திருத்தலைச்சங்காடு.

தசரதச்சக்கரவர்த்திக்கு இராமலக்ஷ்மணர்கள் திலதருப்ப ணம் செய்யப் பெற்றதலம் திலதருப்பணபதி; இது திலதைப்பதி என்று மருவித் திருப்பதிகங்களில் காணப்பெறுகின்றது. இராமர் முதலியோர் திலதருப்பணம் செய்யுந் திருவுருவம் அவ்வாலயத்தி லிருக்கின்றது.

பெரியான் என்னும் பள்ளன் உழுது கொண்டிருக்கையில் சிவ பெருமான் ஜங்கமர் போல் அவனிடம் சென்று அன்னம் கேட்க அவன் தன்னூருக்குச் சென்று அன்னம் கொண்டு வருவதன்முன் அவன் உழுதிருந்த புலத்தில் தினை விளைந்து பழுத்திருக்கும்படி செய்து மறைந்தருளியதலம் திருத்தினைநகர்.

சிவபெருமான் ஆற்றிடைக்குறையில் தோன்றிய தலம் திருத் துருத்தி. துருத்தி-ஆற்றிடைக்குறை.

குற்றால் தலவிருக்ஷமான காரணத்தால் குற்றாலம் என வழங் கப்பெறுகின்றது.

தெங்கு தலவிருக்ஷமாகப் பெற்றதலம் திருத் தெங்கூர்.

தளியையுடையதலம் திருத்தளிச்சேரி (தளி - கோயில்) தளி, தெளி யெனப்பதிகங்களில் காணப்பெறுகின்றது. கோயில்பத்து என வழங்கவும் பெறுகின்றது.

வதிட்டர் பூசித்ததலம் வதிட்டை; இது திட்டையெனமருவித் தென்குடியிலுள்ள வதிட்டை,திருத்தென்குடித்திட்டைஎனக்காண ப்படுகின்றது.

நற்பதி திருநல்லூர். திருநல்லூரில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருமணம் செய்து சோதியிற்கலத்தலால் இதனைத்திருநல் லூர்ப்பெருமணம் என்பர்; இத்தலம் ஆச்சா தலவிருக்ஷமாகலான், ஆச்சாபுரம் என வழங்கப்பெறுகின்றது.

நளச்சக்கரவர்த்தி பூஜைசெய்து சனிபகவானது துன்பம் நீங்க ப்பெற்றதலம் திருநள்ளாறு; இது,தருப்பாரணியம் என்றும் பெயர் பெறும். சுவாமியின் திருவுருவம் தருப்பைக் கொழுந்துகள் சேர்ந் தாற் போலிருக்கின்றது.

திருநனிபள்ளி இது சிறப்பின் மிகுதியையுடைய கோயில் என ல்வேண்டும்.

நல்ல நிலத்துத் தோன்றிய மாடக்கோயில் திருநன்னிலத்துப் பெருங்கோயில்.

ஐந்துதலை நாகம் பூசித்துப்பேறுபெற்றதலம் திருநாகேச்சுரம்; இத்தலத்துச் சிவபிரான் திருநாவுக்கரசுநாயனர் தேவாரப்பதிகம் ச-வது பாசுரத்தில்,

சந்தி ரன்னொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள் செய்தபின்
ஐந்த லையர வின்பணி கொண்டருண்
மைந்தர் போன்மணி நாகேச்சுரவரே.

எனவமைக்கப்பெற்றிருக்கின்றனர்.

நாகராஜன் பூஜிக்கப்பெற்றதால் நாகை. (நாகபட்டணம்)சிவபெருமான் புண்டரீக மகருஷியைக்காயத்தோடு ஆரோகணம் செய்து கொண்டதால் காயாரோகணம். ஆகவே திருநாகைக்காயாரோகணம் என்பது; இது திருநாகைக்காரோணம் எனமருவப்பெற்றுப்பதிகங்களில் காணப்படுகின்றது.

நாரைபூசித்துப்பேறுபெற்றதலம் திருநாரையூர்.

நாவல் தலவிருக்ஷமானதலம் திருநாவலூர்.

இலக்குமி பூசித்திருந்த தலம் திருநின்றவூர். திரு-இலக்குமி. இது பதிகங்களில் திருநின்றியூர் எனக்காணப்பெறுகின்றது.

ஊழிகாலத்தும் அழியாது நீடும் தலம் திருநீடூர்.

பசுவினெய் யபிஷேகஞ் செய்து பூசித்த தலம் திருநெய்த்தானம்.

நெல்லிதலவிருக்ஷமான தலம் திருநெல்லிக்கா.

சிவபெருமான் நெல்வயலிற் றோன்றிய தலம் திருநெல்வாயில்.

பஞ்சகாலத்தில் நைவேதனத்திற்கு அருமையாயிரந்து கொண்டுவந்து உலர்த்திய நெல்லைப் பெருமழையில் வெள்ளமடித்துப்போ

காவண்ணம் வேதசருமாவின் பொருட்டு வேலி கட்டிக்காத்தருளிய தலம் திருநெல்வேலி.

காமதேனுவின் புத்திரிகள் நால்வரில் பட்டி என்பவள் பூசித்துப்பேறுபெற்ற தலம் பட்டீச்சரம்.

பார்வதியார் கைலாயத்திலடித்த பந்தையணிந்துகொண்டதலம் திருப்பந்தணநல்லூர்.

மேலாகிய மலையாகலின் திருப்பரங்குன்றம், (பரம்-மேலாகிய, குன்றம் - மலை.)

பராய் தலவிருக்ஷமாகப் பெற்றதலம், திருப்பராய்த்துறை.

பருதி (சூரியன்,) பூசித்ததலம் திருப்பருதிநியமம், இது: பருதியப்பார் கோயில் என வழங்கப்பெறுகின்றது.

திருநந்திதேவர் பருவத வடிவமாகிச் சிவபெருமானைத் தாங்கிக்கொண்டிருக்கும் தலம் திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) திருநந்திதேவரது திருமணக்கோலத்தை சப்தஸ்தானங்களிலுள்ள ருஷிகளுக்குத் தரிசனம் கட்டளையிடும்படி ஸ்ரீஐயாறப்பர் திருவையாற்றினின்று பயணமாய்ச் சென்ற தலம் திருப்பயணம்(பிரயாணபுரம்.) திருப்பழனம் எனமருவித்தேவாரத் திருப்பதிகங்களில் காணப்பெறுகின்றது.

பருத்தபழுவெலும்பையுடைய யானையையுரித்துப் போர்த்திக்கொண்டருளிய தலம் திருப்பழுவூர்.

திருமலேராயன் என்னும்பழைய ஆற்றங்கரையிலுள்ள தலம் திருப்பழையாறை.

அதன்வடக்கேயுள்ள தளி-வடதளி, தளி-கோயில்.

வன்பாக்கம் என்னும் கிராமத்திற்குச்சமீபமாயும் பனைதலவிருக்ஷமாயுமுள்ள தலம் வன்பாக்கம்பனங்காட்டூர்; இதுவன்பார்த்தான் பனங்காட்டூர் என மருவிப்பதிகங்களில்காணப்பெறுகின்றது.

புறவுக்காகத்தன்தேகத்தை யறுத்துக்கொடுத்த சிபிச்சக்கரவர்த்திக்குத் தரிசனங்கட்டளை யிட்டருளியதும் பனைதலவிருக்ஷமாயுமுள்ளதலம் புறவார்பனங்காட்டூர்.

பனை தலவிருக்ஷமாயுள்ள தலம் திருப்பனந்தாள்.

தாடகையென்னும் ஒருமாதின் அன்புக்காக சிவபெருமான் சாய்ந்திருக்குமிவ்வாலயத்திற்குத் தாடகேச்சுரம் என்றும்பெயர்.

பனை தலவிருக்ஷமாயுள்ள தலம் திருப்பனையூர்.

சிவபெருமான் ஓர் மூங்கிலடியிற் றோன்றியருளிய தலம் திருப் பாசூர். பாசு-மூங்கில்.

ஆதிசேடன் (பாம்பு) தனஞ்சயமகருஷி வந்து பூசித்துப்பேறு பெற்றதலம் பாம்பணி (திருப்பாதாளீச்சுரம்.)

பாதிரிதலவிருக்ஷமாயும் வியாக்கிரபாதர் பூசித்ததாயுமுள்ள தலம் திருப்பாதிரிப்புலியூர் (வடபுலியூர்.)

தக்கன் செய்தயாகத்தை அழித்து அவன்தலையைப் பறித்த தலம் திருப்பறியலூர். (பரசலூர் எனவழங்குகின்றது.)

நாகராஜன் (பாம்பு) பூசித்துப் பேறுபெற்றதலம் திருப்பாம்பு புரம். இது திருப்பாம்புரம் எனமருவிப்பதிகங்களில் காணப்பெற் றும் வழங்கப்பெற்றும் வருகின்றது.

பாலை தலவிருக்ஷமாயுள்ள தலம் திருப்பாலைத்துறை.

மார்க்கண்டருஷி பூசிக்கும்போது அபிஷேகத்திற்குப் பசுவின் பால் கிடையாமல் வருந்த, சிவபெருமான் பால் பெருகும்படி அனுக் கிரகித்த தலம் திருப்பாற்றுறை.

அக்கினிதேவன் பூஜித்துப்புகல் அடைந்ததலம் திருப்புகலூர்; இதிலுள்ள ஆலயத்தின் பெயர் வர்த்தமானீச்சுரம்.

புது ஊர் திருப்புத்தூர் (நவபுரம்)

புள்-சம்பாதி ஜடாயு, இருக்கு-வேதம், வேள்-சுப்பிரமணியக் கடவுள், பூசித்துப்பேறுபெற்றதலம் புள்ளிருக்குவேளூர்.

பிரளயகால வெள்ளத்துக்கு அழியாது புறம்பாயிருந்ததலம் திருப்புறம் பயம். பயம்-பிரளயநீர்.

புன்கு தலவிருக்ஷமாயுள்ளதலம் திருப்புன்கூர்.

பூந்தோட்டத்தில் உலைத்துருத்தியே சிவலிங்கப்பெருமானைப் பெற்றதலம் திருப்பூந்துருத்தி.

ஆதிசேடன்-பல்லியர், கௌதமர்,வாமதேவர் முதலியோர் புட்பவனம் வைத்துப் பெரும்பேறு பெற்றதலம் திருப்பூவனூர்.

பெண் (தேவகன்னியர், ஆ-காமதேனு-கடம்-வெள்ளையானை) பூசித்துப் பேறுபெற்றதலம் திருப்பெண்ணுகடம்.

வியாக்கிரபாதருஷி பூஜித்துப் பேறுபெற்ற தலம்-திருப்பெரும் புலியூர். (தென்புலியூர்.)

சிவசத்தி பிரமாமுதலியோர் பேணிப்பூசித்திருந்ததலம் திருப்பேணு பெருந்துறை.

(இன்னும் வரும்)

மு. சாம்பசிவநாயனர்.

உ

சிவமயம்.

இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

ஊர்தேடுபடலம்.

———:o:———

வாழு மன்னுயிர் யாவையு மொருவழி வாழ
வூழி நாயகன்றிருவயி றெத்துள திவ்வூ
ராழி யண்டத்தி னருக்கன்ற,னலங்குதேர்ப்,புரவி
யேழு மல்லன வீண்டுள குதிரையு மெல்லாம்.

என்னும் ௯-ம் செய்யுளில் 'ஏழுமல்லன வீண்டுள குதிரையு மெல்லாம்' என்பது, 'ஏழுமல்லவிங்கீண்டிய குதிரைமற்றெல்லாம்' எனக்காணப்படுகின்றது. ஏழுமல்லவாகிய குதிரை மற்றெல்லாம் இங்கு ஈண்டிய' எனப்பொருடந்து சிறந்து நிற்றலிற் பின்னையதே

பொருத்தமுடைத்து. இதன் கருத்தை ௧௧-ம் செய்யுட் கருத்துப் போற் கொள்க.

ஷை

மரம டங்கலுங் கற்பக மனையெலாங் கனக
மரம டந்தையர் சிலதிய ரரக்கியர்க்கமர
ருரும டங்கிவந் துழையரா யுழல்பவ ரொருவர்
தரம டங்குவ தன்றிது தவஞ்செய்த தவமால்.

என்னும் ௧௦-ம் செய்யுளில், 'தவஞ்செய்த தவமால்' என்பது தவத்துறுஞ் செயலே' எனக்காணப்படுகின்றது. இப்படி யெல்லா நிகழ்வது இராவணன்முதலிய அரக்கர் செய்த தவத்தின் செயலே' எனப் பொருடந்து சிறந்துநிற்றலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. 'தவஞ்செய்ததவம்' என்றல் ஈண்டுப்பொருத்த மின்றாதல் இயைபின்மை நோக்கிக்காண்க.

ஷை

எறித்த குங்குமத் திளமுலை யெழுதிய தொழில்கள்
கறுத்த மேனியிற் பொலிந்தன ரூடலிற் கனன்று
மறித்து நோக்கியர் மலரடி மஞ்சுள பஞ்சி
குறித்த கோலங்கள் பொலிந்தன வரக்கர்தங் குஞ்சி.

என்னும் ௯௨-ம் செய்யுளில், 'எழுதியதொழில்கள்' என்பது, 'எழுதியதொயில்கள்' எனக்காணப்படுகின்றது. முலையிலெழுதுவது தொய்யிலாதலின் பின்னையது சிறப்புடைத்து. இன்னும் 'பொலிந்தனரூடலில்' என்பது, 'பொலிந்தன வூடலில்' எனவும், 'மலரடி மஞ்சுள பஞ்சி' என்பது 'மலரடி மஞ்சனப்பஞ்சி' எனவும் காணப்படுகின்றது. முலையி லெழுதிய தொயில்கள் மேனியிற் பொலிந்தன, அடியிற் பஞ்சியாலெழுதிய கோலங்கள் குஞ்சியிற் பொலிந்தன எனப்பொருள் கொள்ளுமிடத்துப்பின்னைய பொருத்தமுடையவாதல் காண்க. 'அடிமஞ்சனப்பஞ்சி' 'அடிகுளித்தபஞ்சி' எனப்பொருள் கொள்க. மஞ்சனம் மிகுதிகுறித்துநின்றது. 'மஞ்சுள' என்பது இயைபின்றாதல் காண்க. எழுதிய குறித்த என்னும் வினைகளுக்கு நோக்கியர்கருத்தா. 'மறிக்கணோக்கியர்' எனவும் பாடம்.

ஶ்ரீ

கழலிலாக் காலுங் கால வயிலிலாக் கையுங் காந்து
மழலிலாக் கண்ணு மில்லா வாடவ ரில்லை யன்னோர்
குழலுலாய்க் களிவண் டார்க்குங் குஞ்சியாற் பஞ்சிகுன்று
மழலையாழ் குழலைச் செவ்வாய் மாதரு மில்லை மாதோ.

என்னும் ௩௯-ம் செய்யுளில், 'குழலுலாய்க் களிவண்டார்க்குங் குஞ்சியாற் பஞ்சிகுன்று - மழலையாழ்குழலைச்செவ்வாய் மாதரு மில்லை மாதோ' என்பது 'குழலுலாய்க் களிவண்டார்க்குங் கோதையிலாரு மோசை - மழலையஞ் சொல்லிலாதமாதரு மில்லைமாதோ' எனக்காணப்படுகின்றது. வண்டார்க்குங் கோதையில்லா மாதரும், மழலையஞ் சொல்லிலாத மாதருமில்லை' எனப்பொருடந்து முன்னையவிரண்டடியின் வைப்புப் போலுதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஶ்ரீ

மேக்கு நால்வகை மேகமுங் கீழ்விழத்
தூக்கினலன்ன தோயத்த தாய்த்துய
ராக்கினன் படை யன்ன வகழியை
வாக்கினுலுரை வைக்கலு மாகுமோ.

என்னும் ௧௪௯-ம் செய்யுள்,

மேக்கு லாவிய மேகமெலாம் படிந்
தூக்கி யுண்டெழுந் தோயத்தி னேங்கிட
வாக்கினன்கடல் போலிவ் வகழியை
வாக்கினுலுரை வைக்கலு மாகுமோ'

எனக்காணப்படுகின்றது. பின்னையது பொருட் பொருத்தமும் சிறப்புமுடையவாதல் காண்க. 'துயராக்கினன் படையன்ன வகழியை' என்றல் சிறப்பின்றுதல் காண்க.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

ஓர் குறிப்பு.

செந்தமிழ்த் தொகுதி IV. பக்கம் 113-ல் "பாண்டிய சாஸனங்கள்" என்னும் தலைப்பின்கீழ்த் தென்காசிச் சிவாலயத்தின் கோபுரத்தில் பொறித்துள்ள, பாக்களாலமைந்த சில சாஸனங்களை வெளியிட்டபோது எழுதத்தவறின பாட்டொன்று இப்பொழுது பதிப்பிக்கப்படுகிறது. மேற்சொன்ன விஷயத்தில் அவ்வூர்க்கோயிலின் கோபுரம் 1457-கி. பி. யில் அரிகேசரிபராக்கிரமனால் துவக்கப்பட்டு, அதின் கற்பணி ஆறாண்டில் முடிவுபெற்றதென்றும், அவ்வாண்டே பராக்கிரமனும் கைலை சென்றானென்றும் எழுதியுள்ளேன். தன்றமையனால் அரைகுறையாய் விடப்பட்ட கோபுரத்திருப்பணியைக் குலசேகரனென்னுமரசன் முடித்தானென்பது அடியிற்காணும் பாட்டினால் விளங்கும்.

இக்கோபுரமானது அவசரத்தில் துவக்கப்பட்டு அவசரமாயே கட்டப்பட்டமையால், அஸ்திவாரம் கெட்டிப்படாமல், பிற்காலத்தில் கொஞ்சங்கொஞ்சமாய் இருபுறமும் அமிழ்ந்து, கட்டிடத்தில் அபாயகரமான வெடிப்புத்தோன்றி, மேற்றளங்கள் இடிந்துவிழுந்துவிட்டன. அன்றியும், கற்பணியின்பேரில் ஏற்றிய பாரமானது சாதாரணமாய்த் தாங்கக்கூடியதற்கும் அதிகமாய்ப் போய்விட்டபடியால், கோபுரத்தின் அடிப்பாகங்கள் நொறுங்கிவிட்டன. அவ்வூரார் கோபுரம் பாழ்பட்டது அக்கினிபாதையாலென்கிறார்கள். ஆயின், இக்கூற்றுக்குத்தகுந்த சான்றொன்றுங்காணேம்.

சாஸனச்செய்யுள்.

* 1. விண்ணாடர் போற்றுந்தென்காசி
2. பொற்கோபுரமீதி லெங்களண்ணாழ்வி
3. செய்த பணியிப்படி குறையாட்க்கிட
4. க்கவொண்ணா தெனக்கண்டுயர்ந்த
5. தட்டோடெங்கு மூன்றுவித்தான்
6. மண்ணாளுமாலழகன் குலசேகர மன்னனே.

து. அ. கோபிநாதராவ்.

---

* இக்கவிசாஸனத்திலுள்ளபடி பதிப்பிக்கப்பட்டது.